
KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

ஏப்ரல் - ஜூன் 2014 காலாண்டிதழ் இதழ் - 2

ரூபா 80
இருவெட்டுடன்
ரூபா 100



மனப்பகிர்வு

## காலை இழந்தும் சாலையில் சாதனை

வெளியீடு
கருவி
மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்


ERIC GANESH
கண் வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும்
கண்ணாடிகளை சரிவரப் பெற்றுக்கொள்ளவும்
நவீனரக frame களையும், தரமான Lense களையும்
பெற்றுக்கொள்ள அன்றும் இன்றும் என்றும்
கண்ணாடிகளுக்கு பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
பல்மூக்குக் கண்ணாடியகம்
Head Office
566, Hospital Road, Jaffna.
021 222 2486
Branch :
91, K.K.S. Road, Kokuvil
107, K.K.S. Road, Chunnakam


அழகுக்கு அழகு செய்யும் அற்புத ஆடைகளின் அரங்கம்
சிவகணேசன் டெக்ஸ்டைல்ஸ்
புதுமையும் எழிலும் பொலிவும்
கொண்ட பட்டு, பருத்தி ஜவுளி ரக
ஆடைகளின் சங்கமம்
Siva Kanesan
TEXTILES
Specialist in wedding Sarees
41, Grand Bazaar, Jaffna. Tel.: 021 222 2063

இதழ் 02

# வலு

ஏப்ரல் - ஜூன் 2014

**மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களையும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை**


பிரதம ஆசிரியர்

திரு.க.தர்மசேகரம்

ஆசிரியர் குழு

திரு. நா. கீதாகிருஷ்ணன்
திரு. செ.பிரிந்தாபரன்
திரு. இ.தனஞ்சயன்
திரு.யோ.சுதாகரன்
திரு.து.சற்குணராசா
செல்வி அ.பவளரஞ்சினி
திரு.ஆ.பரமேஸ்வரன்



**வெளியீடு**

கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்,
இல.1155/15, அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 205 4224
Email : karuvi.org@gmail.com
web: karuvi.org



தொடர்புகளுக்கு:
நா.கீதாகிருஷ்ணன் - 0752275205
ஆ. பரமேஸ்வரன் - 0779791366


## உள்ளே....


01. மனப்பகிர்வு 02

02. ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோரின் உரிமைகள் தொடர்பான பிரகடனம் 03

03. மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக மாறிவரும் அணுகுமுறைகள் 06

04. வலிகளை உரமாக்கி எழுந்த விருட்சங்கள் 10

05. சிறுகதை 19

06. செய்திச்சாளரம் 22

07.முற்றத்து மல்லிகை 24

08.எழுதுங்கள் வெல்லுங்கள் 28

09.எண்ணக்கிண்ணம் 30

10. வலுவிடம் கேளுங்கள் 32

# மனப் பகிர்வு

வாசக நல்லுள்ளங்களுக்கு வணக்கம்

வலுச் சஞ்சிகையின் இரண்டாம் இதழ் ஊடாக உங்களோடு இணைவதில் நாம் மனநிறைவடைகிறோம். ஆக்க பூர்வமான முயற்சிகளுக்கு எமது சமூகம் என்றுமே ஆதரவு தரத் தவறியதில்லை என்பதற்கான அடையாளமாக நீங்கள் வலுச் சஞ் சிகையின் இதழ் ஒன்றிற்கு வழங்கிய ஆதரவினை நாம் காண்கின்றோம்.

வலுவிழப்புடன் கூடிய நபர்கள் தொடர்பான விழிப்புணர்வினை எமது சமூகத் தில் மேலும் பரவலாக்குவதற்கான முயற்சிகளை வலுச் சஞ்சிகையினூடாக நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம். இன்னும் எமது சமூகச் சூழலில் ஒதுங்கி வாழ்கின்ற மாற்றுத்திறனாளிகளும் சில நபர்களால் புறக்கணிக்கப்பட்டு சமூக இடைவினைப் பொறிமுறைக்குள் அகப்படாத மாற்றுத் திறனாளிகளும் இருக்கவே செய்கின்றனர். இத்தகைய சமூக மாந்தர்கள் எமது விசேட கவனிப்புக்குரியவர்களாக உள்ளனர். இத்தகையவர்களுக்கு கரம் கொடுத்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டி அவர்களும் எமது சமூகத்தில் சரிநிகர் சமமாக வாழ்வதற்கான வாய்ப்புக்களை உங்களாலும் ஏற்படுத்த முடியும்.

இத்தகைய மனிதர்களை நீங்கள் கண்டால் மாற்றுத்திறனாளிகளுக்காக பணி செய்கின்ற நிறுவனங்களோடு அவர்களை தொடர்புபடுத்தி விடுவதன் மூலமோ அல்லது அவர்கள் தொடர்பான விவரங்களை இத்தகைய நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலமோ அடிப்படையான பயனுறுதியுள்ள உதவியை நீங்கள் செய்யமுடியும்.இவ்வாறு நீங்கள் செய்யும் பட்சத்தில் சிறந்த ஒரு சமூகப்பணியை ஆற்றியவர் என்ற திருப்தியை நீங்கள் எய்த முடியும். இதனை நீங்கள் மனதில் கொண்டு மாற்றுத் திறனாளிகள் தொடர்பான பணி மேம்பாட்டிற்கு ஆதரவு நல்குவீர்களென நாம் நம்புகின்றோம்.

தொடர்ந்தும் வலுச் சஞ்சிகை வளம் பெறுவதற்கானஆலோசனைகளும் ஆக்கங்க ளும் நெறிப்படுத்தல்களும் உங்களிடம் இருந்து கிடைக்கும் என்ற திடமான நம்பிக்கை யோடு வலுச்சஞ்சிகை இதழ் இரண்டினை உங்கள் கரங்களில் நாம் வழங்குகின்றோம்.

**பிரதான ஆசிரியர் க.தர்மசேகரம்**

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களே!
வலு எனும் இச் சஞ்சிகை உங்களுக்கானதே. எனவே உங்களுக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை இச் சஞ்சிகை மூலமாக வெளிக்கொணருங்கள். மாற் றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள், உங் களிற்கு இருக்கும் சந்தேகங்களை 'வலுவிடம் கேளுங்கள்' பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்....

# ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோரின் உரிமைகள் தொடர்பான பிரகடனம்

ஐக்கிய நாடுகள் சபை உலகில் வாழுகின்ற வலுவிழந்தோர் ஏனைய மனிதர்களைப் போல் சகல உரிமைகளும் பெற்று கௌரவமாக வாழவேண்டும் என்ற உயரிய நோக்கோடு 1975 ஆம் ஆண்டு வலுவிழந்தோருக்கான உரிமைகளைப் பிரகடனம் செய்தது. உலகில் வாழ்கின்ற அனைத்து. மாற்றுத்திறனாளிகளும் இவ் உரிமைகளுக்கு உரித்துடையவர்கள்.

உலகநாடுகள்அனைத்தும்தங்கள்நாடுகளில் வாழும் மாற்றுத்திறனாளிகள் இவ் உரிமைகளுடன் வாழ வழி வகைகளைச் செய்யும் இடத்து வலுவிழந்தோரும் இவ்வுலகில் உரிமைகளுடன் கௌரவமாக வாழ்வதற்கான ஏது நிலை உருவாகும்.

ஐ.நா. சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமை சாசனத்தில் வலுவிழந்தோருக்கான வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது. வலுவிழந்தோருக்கு வழங்கப்படும் உரிமைகள் எவ்வித வேறுபாடும் இன்றி மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் உரித்துடையது. வலுவிழந்தோர் கௌரவமாக வாழ்வதற்குரிய வாழ்வியல் மற்றும் குடியியல் உரிமைகள், தொழில் தொடர்பான உரிமைகள் இச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பொருளாதார சமுதாயப் பாதுகாப்பு விடயங்களில் வலுவிழந்தோர் விசேடமாகக் கவனிக்கப்படவேண்டும். வலுவிழந்தோர் அவமானங்களுக்குஉள்ளாக்கப்படாமல்பாதுகாப்புடன் வாழ்வது தொடர்பாகவும் இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ள அதே வேளை பாதிக்கப்பட்டவிடத்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்போது விசேடமாகக் கவனிக்கவேண்டிய வலுவிழப்புத் தன்மைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வலுவிழந்தோர் தொடர்பான விடயங்களை மேற்கொள்ளும்போது வலுவிழந்தோருக்காக சேவையாற்றி வருகின்ற நிறுவனங்களின் ஆலோசனையைப் பெறுதல் பயனுடையதாக அமையும். இவ் உரிமை சாசனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வலுவிழந்தோரது குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினருக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும். இவ்வாறான அம்சங்களைக் கொண்டதாக இச் சாசனம் அமைந்துள்ளது. இச் சாசனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

01. வலுவிழந்தோர் என்ற பதமானது பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது. “ஒருவர் பிறப்பிலிருந்தோ அல்லது அதற்கு பின்னராகவோ அவரது முழுமையான அல்லது பகுதியளவிலான உடல் அல்லது உளப்பாதிப்பின் காரணமாக அந்த நபருடைய தனிப்பட்ட அல்லது சமூக வாழ்வின் இருப்பினை உறுதிப்படுத்த முடியாத நிலையில் இருப்பின் அந்நபர் வலுவிழந்தவர் எனக் கருதப்படுவார்”

02. வலுவிழந்தவர்கள் இப்பிரகடனத்

தில் சொல்லப்பட்ட அனைத்து உரிமைகளையும் அனுபவிக்க முடியும். இந்த உரிமைகள் அனைத்தும் அனைத்து வலுவிழந்த நபருக்கும் எந்த விதமான கட்டுப்பாடோ இன, நிற, பால், மொழி, மத, பூர்வீக, பொருளாதார, பிறப்பு அல்லது அவற்றின் ஒத்த நிலைகளின் அடிப்படையில் இன்றி அனைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வழங்கப்பட வேண்டும்.

*03.* வலுவிழந்த அனைத்து நபர்களும் இயற்கையான மனித சுயகௌரவத்தைக் கொண்டுள்ளனர். அத்துடன் பிறப்பிலிருந்தோ அல்லது இயற்கையாகவோ பாதகமான வலுவிழப்பினை கொண்டவர்கள் அனைவரும் ஏனைய அனைத்து அவர்களது வயதை ஒத்த பிரஜைகளைப் போல அடிப் படை உரிமைகள் அனைத்தையும் கொண்டுள்ளனர். அதாவது அடிப்படையானது ஏனைய உரிமைகள் தொடர்பிலும் சாத்தியமானஅனைத்து வழிகளிலும் கௌரவமான சாதாரண வாழ்வாதார உரிமையை வலுவிழந்தவர்கள் கொண்டுள்ளனர்.

*4.* வலுவிழந்த அனைவரும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் அனைத்தையும் ஏனைய சாதாரண நபர்களைப் போலவே கொண்டுள்ளனர். இப் பிரகடனத்தின் 7 ஆவது பந்தியில் குறிப்பிட்ட உரிமைகள் தொடர்பில் மன வளர்ச்சி குன்றியோர் தொடர்பில் சாத்தியமான சில மட்டுப்படுத்தல்கள் பிரயோகிக்கப்பட முடியும்.

*05.* வலுவிழந்தோர் அனைவரும் தமது தன்னம்பிக்கையை அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தீர்மானிப்பதற்கு உரித்துடையவர்கள்.

*06.* வலுவிழந்தவர்கள் அனைவரும் உளவியல், மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்கும் செயற்கை அவயங்களைப் பொருத்துவதற்கும் மருத்துவ மற்றும் சமூக, புனர்வாழ்வு, கல்வி தொழிற்பயிற்சி, உதவிகள், ஆற்றுப்படுத்துகை, (உளவள சிகிச்சை) முதலிய சேவைகளைப் பெறுவதற்கும் அவற்றின் மூலம் தமது திறன், வலு என்பற்றை ஆகக் கூடிய வரையில் விருத்தி செய்வதற்கும். சமூகத்தில் உள்வாங்கப்படவும் அல்லது மீளளிப்பு செய்யப்படவும் தேவையான உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

*07.* வலுவிழந்த நபர்கள் பொருளாதார அல்லது சமுதாய பாதுகாப்பினையும் கௌரவமான வாழ்க்கையையும்பெறுவதற்குரிய உரிமையையும் கொண்டுள்ளனர். அத்துடன் அவர்கள், அவர்களது திறமைக்கேற்ப தொழில் செய்வதற்கும் பயனுள்ள உற்பத்திகளில் ஈடுபடவும் சம்பளம் பெறும் தொழிலை மேற்கொள்ளவதற்கும் தொழில் சங்கத்தில் இணைவதற்கும் உரிமையை கொண்டுள்ளனர்.

*08.* சமூக பொருளாதார திட்டமிடல் நடவடிக்கைகளின் போது வலுவிழந்த நபர்களின் விசேட தேவைகள் கருத்தில் எடுக்கப்படுவதற்கு அவர்கள் உரித்துடையவர்கள்.

*09.* வலுவிழந்த நபர்கள் அனைவரும் தமது குடும்பத்துடனோ அல்லது பாதுகாவலருடனோ வாழ்வதற்கும் அனைத்து சமூக நடவடிக்கைகளிலும் பங்கேற்பதற்கும் ஆக்கவும் அனுபவிப்பதற்குமான உரிமையினை கொண்டுள்ளனர். மேலும் வலுவிழந்த நபர்கள் எவரும் விசேடமாக அவரது முன்னேற்றம் கருதி அவரது வதிவிடம் அவரது வயதை ஒத்த ஏனைய சாதாரணமானவர்கள் பெறும் விதிவட வசதியை ஒத்ததாகவே

இருக்கவேண்டும்.

*10.* வலுவிழந்த நபர்கள் கேவலப்படுத்தல், பாகுபாடு காட்டக்கூடிய ஒழுங்கு விதிகள் வழமையான துன்புறுத்தல்கள் அவமானங்கள் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பளிக்கப்படல் வேண்டும்.

*11.*வலுவிழந்த நபர்கள் தம்மையும் தமது சொத்துக்களினையும் பாதுகாக்கும் பொருட்டு அவசியமானவிடத்து அவர்களுக்குரிய சட்டரீதியானஉதவிகள் கிடைக்கப்பெறக்கூடியதாக இருக்க வேண்டும். வலுவிழந்த நபர்களுக்கெதிராக சட்டமுறைகளை மேற்கொள்ளும் போது அவர்களது உடல் உள நிலைமைகளை பூரணமாக கருத்திற்கொண்டு அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்த வேண்டும்.

*12.* வலுவிழந்த நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்களையும் வலுவிழந்த நபர்களின் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்தல் பயனுடையதாக அமையும்.

*13.* வலுவிழந்த நபர்கள் அவர்களது குடும்பம், சமூகம் என்பவற்றிக்குஇப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து உரிமைகளும் கருத்துக்களும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான உரிமைகள் ஆவணங்களுக்குள் உறங்கிக்கிடக்கும் நிலைமாறி எப்போது விழித்தெழுகின்றதோ அன்று தான் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் நம்பிக்கை விடியல் உதயமாகும்.

**- குறுமுனி**

அன்பார்ந்த வாசகர்களே!

மாற்றுத்திறனாளிகள் தொடர்பாகவோ அல்லது மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்தக் கூடிய வகையில் அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியனவாக ஆக்கங்களை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். எனவே உங்கள் ஆக்கங்களை கவிதையாகவோ அல்லது சிறுகதையாகவோ அல்லது கட்டுரையாகவோ அல்லது செய்தி துணுக்குக்களாகவோ எமக்கு எழுதி அனுப்புங்கள் தரமான உங்களது ஆக்கங்கள் தொடர்ந்து வரும் வலுவில் இடம்பெறும் என்பதனை தெரிவித்து நிற்கின்றோம்.

மாற்றுத்திறனாளிகள் என்பது அண்மைய ஆண்டுகளிலேயே தமிழுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு புதிய சொல்லாகும். "ஊனம்" என்ற பழமையான தமிழ்ச் சொல்லுக்குப் புதிய விளக்கம் ஒன்று தேவைப்பட்டது. ஏனெனில் ஊனமுற்றவர்கள் என்று சொன்னவுடன் எல்லோர் மனதிலும் உடலில் குறைபாடு உடையவர்கள் அல்லது ஐம்பொறிகளில் ஏதாவது ஒன்றிலோ பலவற்றிலோ குறைபாடு உடையவர்கள் என்ற கருத்தே ஆழப்பதிந்து நிற்கின்றது. இத்தகையவர்களுக்கு பரிதாபப்பட வேண்டும். விட்டுக்கொடுக்க வேண்டும். ஏலாதவர்கள் என்றெல்லாம் எண்ணத் தோன்றும் மனம் படைத்தவர்களும் நம்மிடத்தில் இருக்கின்றார்கள்.

செவிடர்கள், குருடர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், நொண்டிகள் என்றெல்லாம் உச்சரிக்கும் போது ஆற்ற முடியாத சோகத்தில் இத்தகையோர் ஆழ்ந்து போகின்றனர் என்பதை நம்மில் பலர் உணர்ந்து கொள்வதில்லை. நாளாந்த வாழ்க்கையிலும் சினிமா, நாடகங்களிலும் நகைச்சுவையாக பயன்படுத்தப்படும் இத்தகைய சொற்கள் கூடப் பலரை மனம்நோகச் செய்யும்.

ஊனம் என்பது ஒருவருடைய பலவீனமல்ல. அந்த ஊனத்தையும் தாண்டி



அந்த மனிதரிடம் வெளிப்படுத்தக் கூடிய திறமைகள் உள்ளது என்பதைப் பலரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

ஊனம் இல்லாதவர்களிடம் ஒரு திறன் இருந்தால், ஊனமுற்றவர்களிடம் வேறு ஒரு திறன் இருக்கும். இதனால் தான் இவர்களை மாற்றுத்திறனாளிகள் என்று தமிழ் வல்லுநர்கள் அழைக்க முற்படுகின்றனர்.

சமூக ரீதியான அந்தஸ்து என்பது இன்று இவர்களுக்கு அங்கீகாரம் பெற்றவையாக காணப்படுகின்றது. உலகமயமாதலுக்கு அமைய மாறிவரும் அறி வியல் யுகத்தில் இவர்கள் பற்றிய அணுகு முறைகளும் மாறிவருகின்றன. மாற்றுத்திறனாளிகளிடமும் எத்தனையோ மனநிறைவுடன் வாழ வேண்டும் என்ற மனிதநேய உணர்வு பலரிடமும் ஏற்பட்டுள்ளமையால், ஆதரவு அளித்தல், சாதனைக்கான களமைத்தல், ஊக்குவித்தல் முதலான உயரிய செயற்பாடுகளை பலரும் இன்று முன்னெடுக்கின்றனர்.

குடும்பத்தில் ஒரு பிள்ளை குறைபாட்டுடன் பிறந்து விட்டால் அதனை அக்காலத்தில் "விதி என்றும்" "ஊழ்வினை என்றும்" பெயர்சூட்டி ஒரங்கட்டி அந்தக் குடும்பத்தினராலேயே அக்குழந்தை ஒதுக்கப்பட்டமையினை காணலாம். ஆனால் இன்று அந்நிலை மாறிவிட்டது. தனிமனித நடத்தைகளால் மாற்ற முடியாதது எதுவுமில்லை. மாற்றுத் திறனாளிகள் சமூகத்தில் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு சாதாரண மானவர்களைப்போல வாழவேண்டும் என்னும் உயரிய பண்பு இன்று பலரிடமும் மேலோங்கியிருப்பதால்அவர்களுக்கான காப்பகங்கள் நவீன வசதிகள் முதலானவற்றை பெற்றுக்கொடுப்பதில் அரசும் சரி, அரசசார்பற்ற நிறுவனங்களும் சரி ஆர்வம் காட்டி வருவதைக் காணலாம்.

"பொறியின்மை யார்க்கும் பழியன்று
அறிவறிந்து ஆல்வினை இன்மை தரும்"

என்பது வள்ளுவன் வாக்கு. ஊனம் என்பது ஒரு பலவீனமல்ல அதையும் தாண்டி அவர்களிடம் வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் உள்ளது என்பதனைத் தான் வள்ளுவரும், உடல் அங்கங்களில் உள்ள குறையாக கருதாது முயற்சி செய்து திறமை, ஆளுமை ஊடாக மாற்றுத்திறனை வளர்க்க முடியும். எனக் குறிப்பிடுகின்றார். இத்தகைய மாற்றுத்திறனை வளர்க்கும் முகமாக இன்று சமூகமும், குடும்பமும் மாறிவருவது இவர்கள் பற்றிய அணுகு முறையில் ஏற்பட்ட விழிப்புணர்வு எனலாம்.

ஒருவனிடமுள்ள திறமையை அவனுடைய பெற்றோர்களால் ஆசிரியர்களால் அறிந்துகொள்ள முடியும். பெற்றோர்கள் அவனது ஆற்றலுக்கு முழுமையாக வழி சமைக்க முடியாவிட்டாலும் நிச்ச யம் ஒரு ஆசிரியரால் அவனுக்கான ஆற்றலுக்கு களம்அமைத்துக்கொடுக்கமுடியும். இதனால் தான் இன்று கல்விக் கொள்கையிலும் இந்த மாற்றுத்தினாளிகள் பற்றிய புதிய சிந்தனைகள் உள்ளார்ந்த ரீதியாக புகுத்தப்பட்டுள்ளன. இன்று விசேட கல்வி, உட்படுத்தல் கல்வி என்றெல்லாம் கல்வித் திட்டத்தில் புதிய கொள்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது கூட மாறிவரும் புதிய அணுகுமுறைக்கான வழி எனலாம்.

முன்பு மாற்றுத்தினாளிகளுக்கான கல்வித் திட்டங்கள் பிரத்தியேகமான முறையில் வழங்கப்பட்டன. இதனால் அர்த்தம் புரியாத அவல நிலைக்கு இவர்கள் உட்படுத்தப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்த கல்வியியலாளர்கள் சராசரி மாணவர்கள் கற்கும் வகுப் பறையிலேயே மாற்றுத்திறனாளிக ளுக்கான வசதிகளையும் பலவீனமா னவர்களாகக் கருதாது, போட்டித் தன் மையூடாக சவால்களை எதிர்கொண்டு முன்னேறுவார்கள். இதனால் அவர்கள் வாழ்க்கையில் நம்பிக்கை மிக்கவர்களாக உருவாகுவார்கள்.

மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக மாறிவரும் புதிய அணுகுமுறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக, ஒலிம்பிக் விளை யாட்டுப் போட்டிகளை குறிப்பிடலாம். பரா ஒலிம்பிக் விளையாட்டு எனும் பெய ரில்மாற்றுத்திறனாளிகள்அதாவது உடல் குறைபாடுள்ள விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இது 1984 ஆம் ஆண்டு முதல் இரண் டாம் உலகப் போரின் பின் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டு இன்று பன்னாட்டு வீரர்களும் பங்கு பற்றும் பிரமாண்டமானநிகழ்வாக மாறிஉள்ளது. இப்போட்டிகளில் சராசரியானவர்கள் போல எம்மாலும் சாதனை படைக்க முடியும் என்பதை மாற்றுத்திறனாளிகள் நிரூபித்து வருகின்றனர்.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம் பிக்கில் உறுப்பிழந்தோர், பெருமூளை வாதம், அறிவுத்திறன் குறைபாடு, சக்கர நாற்காலி பார்வைக்குறைபாடு மற்றும் ஏனையோர்கள் என வகுத்து பங்குபற்றச் செய்கின்றனர்.

பொது இடங்களில் கட்டட அமைப் புக்கான திட்டமிடலில் கூட இன்று மாற் றுத்திறனாளிகளுக்கான நவீன வசதிகள் கருத்தில் கொள்ளப்படுவது புதிய அணு குமுறையினால் ஏற்பட்ட மாற்றமே என லாம்.

மாற்றுத் திறனாளிகள் பற்றிய சமூக விழிப்புணர்ச்சி என்பது இன்று அதிகரித்துக் காணப்படுகின்றது. ஹெலன் கெல்லர் என்ற பெயருடைய மாற்றுத்திறனாளி இன்று உலகத்தில் இருக்கக் கூடிய சிந்தனையாளர்களுக் கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந் தார். இவருடைய குடும்பத்தினரால் கண்ட றியப்படாத இவரது திறமையை அவரது ஆசிரியராக இருந்தவர் கண்டறிந்து அவ ருக்கான மன ஆற்றலை வளர்த்து அவரை ஒரு உயரிய மனிதராக திகழ வைத்தார். இவரைப் போல இன்று பெயர் பெற்ற பல சாதனையாளர்களாக எடிசன் பீத்தோவான், மெல்டன், ஸ்டீபன் போன் றோரைக் குறிப்பிடலாம்.

இன்று சர்வதேச ரீதியாக மாற்றுத் திறனாளிகளுக்குக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் மூன்றாம் திகதி இவர்களுக்கான சர்வதேசதின மாக ஐக்கிய நாடுகள் சபை பிரகட னப்படுத்தியிருப்பது மாற்றுத் திறனா ளிகளுக்கான முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

சராசரி மனிதனாகப் பிறந்த ஒவ்வொ ருவரிடமும் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இவர்களிடம் மனதில் குறைபாடு எனின் அவர்களிடம் காணப் படுவது உடலில் தான் குறைபாடு, இந்தி

யாவில் பல்வேறு மாநிலங்களிலும் மாற்றுத் திறனாளிகளே சொந்தமாக தொழில் நடத்தி, வருகின்றனர். மேலும் அங்கு பல மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்புகளை வழங்குவதையும் காணலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நலத் திட்டங்களுடன் பார்வையற்றோருக் கான பள்ளி இயங்குகின்றது. இப்பள்ளி இங்கிலாந்துப் பெண்மணி ஆன்ஜேன் ஆஸ்கவித் என்பவரால் 1890 இல் உரு வாக்கப்பட்டது. இங்கு பல்வேறு தொழில் பயிற்சிகளை பெற்று வெளி யேறும் மாணவர்கள் சுயதொழிலாளர் களாக வாழ்கின்றனர். இத்தகைய முயற் சிகள்எமது நாட்டிலும் பரவலாகஅறி முகப்படுத்தப்படுமிடத்து தங்கிவாழும் நிலையைத் தவிர்க்கலாம். இது அவர் களது தன்னம்பிக்கைக்கும் வழிவகுக்கும்.
எனவே மாற்றுத்திறனாளிகளைப் பற்றித் தொகுத்து நோக்குமிடத்து, இன்று பத் திரிகைகளிலும் சரி, நவீன தொடர்பாடல் சாதனங்களிலும் சரி இவர்கள் பற்றியசாத னைகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. இதுவும் மாறிவரும் அணுகு முறையே எனலாம்.
மாற்றுத்திறன் என்பது தன்னம்பிக்கை யினால் மட்டுமே வெளிப்படக் கூடியது. இதுவே இவர்களது தாரக மந்திரமாக இருக்க வேண்டும் ஸ்டீபன் ஹாகிங் (stephen hawking) ஒரு பெரிய விஞ்ஞானி இவரால் நடக்க முடியாது வாய்பேசாது கை இயங்காது. இவரது கண்ணும் மனமும் இயங்கியது. இவர் படைத்த சாதனையான "Big Bang Theory and Black Hole Theory" என்பது எல்லோரையும் இவர்பால் திரும் பிப் பார்க்க வைத்தது.
இவரைப்போல சாதனைபடைக்கும் சாதனையாளர்கள் பட்டியல் வருடந் தோறும் நீண்டு கொண்டே செல்கின் றது. எனவே "உன் ஊனத்தை நினைத்து உன்மீது கோபப்படாமல்குறைசொல்லிக் கொண்டிராமல் மற்றவர்கள் வியக்கும் வகையில் உன்னை நீயே திரும்பிப்பார்" என்ற ஸ்டீபனின் கூற்றினை மனதில் பதித்து உலகம் செல்லும் போக்கிற்கமைய ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளும் சிந் திக்க வேண்டும்.

எனவே இந்த உலகம் இயங்குவதற்கு மாற்றுத்திறனாளிகளின் பங்கும் உள் ளது என்ற மகத்தான உண்மையினை ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளும் தம்மனதில் இருத்தி வாழ்க்கையில் வெற்றி காணவேண்டும். மனித வாழ்க் கைப் பயணத்தில் கிடைக்கின்ற சகல விடயங்களும் மாற்றுத்திறனாளிகளுக் கும் கிடைக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போமாக.

**இ.மீனலோயினி**
**உருத்திரபுரம்.**

## வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

# காலை இழந்தும் சாலையில் சாதனை

## டொரி ஃ பாக்ஸ் (Terry Fox)



இன்று வலது குறைந்தவர்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற வகையில் அறிவியல் வளர்ச்சி அத்தனை வசதிகளையும் கொண்டு வந்துவிட்டது. எமது நாட்டில் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் உரியவர்கள் மனம் வைத்தால் அதனையும் தீர்த்துவிட முடியும். ஊனம் என்பது உடலிலல்ல மனதில் தான் எனக் கூறுவார்கள். இது சற்று உளவியல் ரீதியிலான பிரச்சினை என்றாலும் வைத்தியரின்உதவி மட்டு மல்லாது சமூகத்திற்கும் அதில் பெரும் பங்குஉண்டு. அங்கக்குறைவு உடையவர்கள் திறமையற்றவர்கள் அல்ல. அவர்களுக்கும் ஏனையவர்களைப் போலவே மூளையும் எண்ணங்களும் சாதாரணமாக அமைந்திருக்கும். இதில் கவனிக்க வேண்டியது எதுவெனில் ஏற்பட்ட அங்கவீனம் பிறப்பிலிருந்தா அல்லது இடைநடுவிலா

என்பதுதான். ஆரம்ப முதலே எனில் அவர்களுக்காகச் சமூகம் தரவேண்டிய ஆதரவு ஊக்குவித்தல் முறையினைக் கொண்டதாகும். ஆனால் வாழ்வில் எதுவித சிரமுமின்றி வாழ்ந்த ஒருவர் திடீரென ஒருநாள் குறைபாடு அடைந் தால் அங்கு ஏற்படக் கூடிய மன அழுத் தம் சாதாரணமாகத் தீர்க்கக்கூடிய ஒன் றல்ல. அவருக்கு திடீரென ஏற்பட்ட மாற்றத்தினை உள்வாங்கிக் கொள்வது முடியாத ஒன்றாகவே தோன்றும். எனது நிலை அடுத்து என்ன என்ற கேள்வியே அவரது நெஞ்சில் தொக்கி நிற்கும். முதலில் அந்த நிலைமாற அவருக்கான சிகிச்சை வேண்டும். மனதில் தைரியமும் நம்பிக்கையும் ஏற்படுத்தப்பட வேண் டும். உலகத்திற்கு அவரின் தேவையை உணர்த்திட வேண்டும். இது நாம் நினைப்பவை மட்டுமே. ஆனால் இதை யும் கடந்து ஊனம் வந்துவிட்டதே எனப் புலம்பிக்கொண்டிருக்காமல் தன்னம்பிக் கையுடன் என்னாலும் முடியும் என்று வாழ்வில் தான் கொண்ட இலட்சி யத்தை நோக்கிச் சென்றவர்களும் இல்லா மலில்லை.

எப்படி வாழ்வில் சவால்களை எதிர்நோக்கி வெற்றிகொள்ளலாம் என்பதற்கு கனடா நாட்டினைச் சேர்ந்த டெர்ரி ஃபாக்ஸ் (Terry fox) என்பவர் சிறந்த உதாரணமாக விளங்குகிறார். அவர் வாழ்வில் சந்தித்த சவால்கள் அனைத்தையும் ஊனத்திற்கு முன்னும் சரி பின்னும் சரி தன்முயற்சியினாலேயே வெற்றிகொண்டார். தனித்து நின்று போராடும் அவர் குணம் அவரது உள் ளத்திலே மிகப்பலமான சக்தியைக் கொடுத்தது என்றால் மிகையாகாது.

இந்த டெர்ரி ஃபாக்ஸ் 1958 ம் ஆண்டு ஜூலை மாதம் 28 ம் திகதி றோலன்ட் - பெற்றி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக கனடா நாட்டின் மனிற்ரோபா மாநிலத்திலுள்ள வினிபெக் நகரில் பிறந்தார். றோல் என அழைக்கப்பட்ட டெர்ரியின் தகப்பன் கனேடியன் தேசிய ரயில்வேயில் வேலை செய்தார்.

இவரின் தாயார் தன்பிள்ளைகளில் மிகுந்த கவனம் செலுத்துபவர். மிகவும் அன்பாகவும் பழகுவார். ஆயினும் சிறு பிள்ளையாக இருந்தபோதே டெர்ரி மிகவும் பிடிவாதக்காரராகவும், மிகவும் முயற்சியுடையவராகவும் எந்த ஒரு விடயத்தையும் வெற்றிகொள்ளும் வரை போராடும் குணமுள்ளவராகவும் விளங்கினார். அவரது தகப்பன் அவரைப் பற்றிக் கூறும்போது தோல்விகளை அவர் ஏற்பதில்லை, வெற்றிபெறும் வரை முயற்சிப்பதே அவர் குணம் என்கிறார்.

மிகவும் சுறுசுறுப்பான டெர்ரி உதை பந்தாட்டம், றக்பி, பேஸ்போல் போன்ற விளையாட்டுக்களில் உற்சாகமாக ஈடு பட்டாலும் கூடைப்பந்தாட்டமே (Basket Ball) அவரின் மனதிற்குப் பிடித்த விளையாட்டாக இருந்தது. ஆனால் அந்தோ பரிதாபம், ஐந்தே அடி உயரமான அவர் ஆரம்பத்தில் அதில் பிரகாசிக்கத் தவறிவிட்டார். எட்டாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த அவர் பாடசாலைக் கூடைப்பந்தாட்டக் குழு வில் சேர எடுத்த முயற்சிகள் பலனளிக் காது போய்க்கொண்டிருந்தது. அவரின் உடற்பயிற்சி ஆசிரியர் இவருக்கு புத்திமதி கூறுகையில் இவரின் உடற்தோற்றம் நெடுந்தூர ஓட்டத்திற்கே ஏற்றது என்றும் அதனால் அந்த முயற்சியில் இறங்கும்படியும் கூறினார். (டெர்ரிக்கு இதில் மகிழ்ச்சி இல்லையாயினும் நாட ளாவிய அஞ்சல்

ஓட்டம் ஓடியமை தனது ஆசிரியரின் விருப்பத்துக்கு மதிப்பளித்தமையாலே) எனினும் கூடைப்பந்தாட்டத்தை தொடர்ந்து விளையாடி வந்தார். பாட சாலைக் குழுவில் கடைநிலை பிரதி ஆட் டக்காரராகவே இருந்து எட்டாவது படிக்கையில் ஒரு நிமிட நேரமே ஒரு போட்டியின் போது விளையாடி இருந் தார். ஆனால் அவரின் பிடிவாதமான மனநிலை காரணமாகக் கடுமையான பயிற்சி எடுத்து 9 ம் வகுப்பில் அணியின் நிலையான அங்கத்தவரானதோடு 10ம் வகுப்பில் தொடக்க நிலை எடுக்கும் அளவிற்கு உயர்ந்திருந்திருந்தார். அது மட்டுமல்லாமல் 12ம் வகுப்பில் கற்றபோது பாடசாலையின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை தனது நெருங்கிய நண்பனான டக் ஆல்வாட் என்பவருடன் பகிர்ந்து கொண்டார்.

இவரின் போக்கினை அவதானித்த தாயார் இவரை சைமன் பிரேசர் பல் கலைக்கழகத்தில் (Simon Fraser University) உடல் பயிற்சி சம்பந்தமான ஆசிரியப் பணிக்கு ஏற்ற வகையிலுள்ள "Kinesiology" என்ற பயிற்சி நெறியைக் கற்கும்படி சேர்த்தார் இக்கல்வி நெறி யானது மனித அசைவுகள் பற்றிய விளக் கங்களையும் உடற் கூறு மற்றும் அதன் இயக்கம் பற்றியது மட்டுமல்லாது சற்று உளவியல் ரீதியான அம்சங்களையும் கொண்டது. பல்கலைக்கழகத்திலும் மிகத் திறமையான கூடைப் பந்தாட்ட வீரர்களைப் பின்தள்ளி தன் கடுமையான பயிற்சியின் மூலம் முன்னணியில் இருந் தார்.

கல்வியிலும் விளையாட்டுத்துறை யிலும் திறமையாக இருந்த இவரின் வாழ்வில் பாதகமான திருப்புமுனை ஏற்பட ஆரம்பித்த நாள் 1976ம் ஆண் டின் நவம்பர் 12ம் திகதியாகும். பல் கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த டெர்ரி கட்டுமானப் பணிக்குட்பட்டிருந்த ஒரு பாலத்தை அணுகியபோது சற்றுத் தடுமாறி ஒரு டிரக் வண்டியின் பிற்பகுதியுடன்தன் வண்டியோடு மோதுண்டார். தனது வாகனம் பழுதுபட்டதால் வலது முழங் காலில் ஏற்பட்ட பலத்த வலியுடன் வீடு சென்றார். முறையாக வைத்தியம் பார்க்கவும் இல்லை. மீண்டும் டிசெம் பரில் வலி ஏற்பட்ட போதும் அதைக் கவ னியாது அவ்வருட கூடைப் பந்தாட்டப் பருவம் முடியும் வரை விளையாடி வந் தார். ஆனால் பாவம் அவரின் சகிக்கும் தன்மை அதிக காலம் நீடிக்கவில்லை. 1977 ம் ஆண்டு மார்ச்சில் தாங்கமுடியாத வலியின் காரணமாக வைத்தியசாலையை நாடியபோது திடுக்கிடும் தகவல்களுக்கு அவர் முகம்கொடுத்தார். ஏற்பட்ட விபத் தினால்முழங்கால் பலமிழந்து வலிக்கிறது என அது வரையில் எண்ணி வந்த டெர்ரியின் வைத்தியப் பரிசோதனை அவருக்கு "Osteosarcoma" என்ற வகையிலான புற்றுநோய் இருப்பதாக வெளிப்படுத்தியது. இவ்வகைப்புற்று நோய் அநேகமாக முழந்தாள் பகுதிகளிலேயே ஆரம்பமாகும். விபத் திற்கும் இந்நோய்த் தாக்கத்திற்கும் சம்பந்தமில்லை எனவும் அவரின் வலது காலை முழங்காலுடன் அகற்றுவது மட் டுமல்லாது புதியவைத்திய முறையாக வந் துள்ள Chemotheraphy சிகிச்சை மூலம் அவரின் உயிர்வாழும் சந்தர்ப்பத்தை 50 வீதம் வரை அதிகரிக்கலாம் எனவும் கூறிய வைத்தியநிபுணர்கள் அந்த மாபெரும் விளையாட்டு வீரனின் வலது காலை முழந்தாளுடன் நீக்கி விட்டார்கள். Chemotheraphy சிகிச்சை

இப்பொழுது புற்றுநோய்க்கு நன்கு அறியப்பட்டது எனினும் அன்றைய அறிமுக நிலையில் பெரிய நம்பிக்கை தரும் சிகிச்சையாகக் காணப்பட்டது. சாதாரணமாக இப்படியான பெரும் பாதிப்பு ஒருவரைச் சோர்ந்துவிடச் செய்யும். ஆனால் டெர்ரியின் சிந்தனை பெருந்தன்மைமிக்கதாய் இருந்தது பத்தொன்பதே வயதான அவ்விளம் வயதிலேயே சமூகத்தைப் பற்றிய சிந்தனை ஏற்பட்டது. அதாவது, சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் இப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவரின் உயிர்வாழும் வாய்ப்பு வெறும் 15 வீதமாகவே இருந்திருக்கும் என அறிந்த அந்த நல்ல மனம் அறிவியல் வளர்ச் சியின் காரணமாகவே தற்போது அதிகரித்திருக்கிறது. எனவே வாழப் போகும் வருங்காலத்தில் அவ் வளர்ச்சி முழுமைபெற தன்பங்கைச் செலுத்தவேண்டும் என்பதே அவரின் சிந்தனையாக இருந்தது. தான் ஊனமுற்ற நிலையிலும் அதற்கான முயற்சியில் இறங்கவேண்டும் என எண்ணம் கொண் டமை பெருமையானதே.

கால் அகற்றப்பட்ட பின் மூன்று வாரங்கள் வரை செயற்கைக்காலுடன் நடை பயின்றார். விளையாட்டு வீர னாக இருந்த அவர் தன் தந்தையுடன் கொல்ப் (Golf) விளையாடினார். அவரின் இந்த முன்மாதிரி அவரின் துரித நோய்த்தேறலுக்கு உதவியதை வைத்தியர்கள் கண்டு ஆச்சரியப்பட் டார்கள். சுமார் பதினாறு மாதங்கள் அவர் கீமோதெரபி என்ற வைத்திய சிகிச்சையை பிரிட்டிஷ் கொலம்பியா புற்றுநோய்த் தடுப்பு முகவர் நிலையத்தில் பெற்றபோது அங்கிருந்த சக நோயாளர்கள் அந்நோ யினால் பட்ட துன்பத்தையும் இறப் புக்களையும் அந்த நிலையத்தில் உள்ள வசதிக் குறைபாடுகளையும் அவதானித்தார். வைத்திய காலம்முடி வடைந்த வேளையில் தனது உயிர் வாழ் நிலை மேம்பட்டமைக்கு இந்நோய்த் தடுப்புக்காக மருத்துவ உலகம் பெற்ற வளர்ச்சிக்குத்தாம்கடமைப்பட்டதாகவே கருதினார். தான் முன்பு கொண்ட எண்ணத்திற்கு ஏற்பட்ட ஒரு வாய்ப்பாக இதனைக் கருதினார். இது போன்ற மனிதர்கள் இவ்வுலகில் இருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது எமது மனச் சாட்சி எம்மை உறுத்தவில்லையா?

தனக்கு இயலக்கூடியவைகளை வைத்தே புற்றுநோய்த் தடுப்பு நிலை யத்திற்கு உதவ முடியும் என நினைத்த அவர் அதற்கான வழிவகைகளைப் பற்றிச் சிந்தித்தார். சிறந்த கூடைப்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்த அவரை, கனேடிய சக்கரநாற்காலியாளர்கள் விளையாட் டுக் கழகத்திற்காகச் செயற்பட்ட 'றிக் ஹன்சன்' என்பவர் அக் கழகத்தின் சக் கரநாற்காலியாளர் கூடைப் பந்தாட்டக் குழுவில் சேர அழைத்தார். சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோதும்இரு மாதங்கள் அந்த முறையிலான விளையாட்டில் பயிற்சி பெற்று அவ் வணியில் விளை யாடி மூன்று தடவைகள் தேசிய விருது பெற்றார். ஆனால் புற்றுநோய் ஆராய்ச்சிக்காக தான் எப்படி உதவலாம் என்பதிலேயே அவர் கவனத்துடன் இருந்தார்.

அவருக்குப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சைக்கு முதல் நாள் இரவு நியூ யோர்க் நகர மரதன் போட்டியில் பங்கு பற்றிய கால் அகற்றப்பட்ட முதல் மனி தராக அறியப்பட்ட 'டிக் ட்ரோம்' என்பவரின் கட்டுரையைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. அதனையே தனக்கான




ஊக்குவிப்பாக எடுத்து 14 மாதங்கள் மரதன் ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டார் அத்துடன்புற்றுநோய்க்கானவைத்திய சாலைகளில் ஒதுக்கப்படும் நிதிப் பற்றாக்குறையை எண்ணிக் கோபப் பட்டார். ஆகவே கனடா நாட்டின் தூரத்தை மரதன் முறையில் ஓடிக் கடக்கும் முயற்சியில்தான் ஈடுபட்டு புற்றுநோய் விழிப்புணர்வை ஏற் படுத்தவும் அதற்கான ஆராய்ச் சிக்கு நிதி சேகரிக்கவும் எண் ணம் கொண்டார். ஆனால் தன்னை முழுமையாகத் தயார்ப் படுத்தும் வரை அதைத் தனது நண்பனான டக் ஆல்வாட்டைத் தவிர வேறொருவருக்கும் வெளி யிடாமல் இருந்தார். பிரிட்டீ கொலம்பிய மரதன் பந்தயங்களில் பங்குகொண்டு பயிற்சி செய்து வந்தார். முக்கியமான சில போட் டிகளில் இறுதிநிலையாக வந்திருந் தாலும் அவரை ரசிகர்களும் சக வீரர்களும் வாழ்த்திப்போற்றவே செய்தார்கள். இறுதியாகத் தனது எண்ணத்தை வெளியிட்டபோது இவரின் தாயார் அதனைத் தடுக் கவே செய்தார். ஆனால் முடிய வில்லை. தனது முடிவை கனே டிய புற்றுநோய்த் தடுப்புச் சங்கத் திற்கும் அறிவித்ததோடு பல முன்னிலை நிறுவனங்களுக்கும் இதற்காக உதவும்படி கடிதங்கள் எழுதியுள்ளார். தனது சொந்த அனுபவங்கள் பற்றிக் குறிப்பிட்டு வருங்காலத்தில் இந்நிலை முற்றாக மாறவேண்டும் என்ற எண்ணத்தை வைத்தே தான் இதில் ஈடுபடப் போவதாகவும் எழுதினார். போர்ட் மோட்டார்க் கம்பனி வாகனத்தை வழங்கியும் இம்பீரியல் எண்ணெய்

நிறுவனம் வேண்டிய எரிபொருளையும் அடிடாஸ் நிறுவனம் ஒடுவதற்கேற்ற பாதணிகளை வழங்கியும் உதவியதோடு வேறு பல நிறுவனங்களும் உதவ முன்வந்தன. வியாபார நோக்கங்க ளோடு நிபந்தனை விதித்த நிறுவனங் களிடமிருந்து உதவிகளை மறுத்து விட்டார். ஆரம்பத்தில் சந்தேகக் கண் ணோடு இவரின் முயற்சியைப் பார்த்த சங்கம் இவரை மருத்துவச் சான்றிதழ் ஒன்றைப் பெறவேண்டுமெனக் கூறியது. இவரின் இடது இதயவறை வீக்கம் பெற் றிருந்தாலும் விளையாட்டு வீரர்களுக்கு இது சகஜம் என்றே கூறிய வைத்தியர்கள் இவரை அதுபற்றி எச்சரித்தனர். ஆனால் டெர்ரி போட்டியின் போது தனக்கு ஏதாவது இதயப் பிரச்சினை ஏற்பட்டால் உடனே தான் இப்போட்டியை இடைநிறுத்தி விடுவதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் வைத்தியர்கள் இதற்கு ஒப்புதல் அளித்தனர்.

அவரின் இந்த மரதன் ஓட்டத்தினால் கிடைக்கும் நிதி கனேடிய புற்று நோய்த் தடுப்புச் சங்கத்திற்கே செல்லும் என்பதனால் அவர்கள் ஒரு செயற் றிட் டத்தை நிர்ணயித்துக் கொண்டனர். அதன்படி செல்ல வேண்டிய மார்க்கம், சந்திக்க வேண்டிய கிராம நகரங்கள், தங்கு மிடங்கள் கலந்துகொள்ள வேண்டிய நிகழ்ச் சிகள், செய்யக்கூடிய பிரசார உத்திகள் போன்றவை அதில் உள்ளடங்கும்.

ஆரம்ப நிலையில் ஒரு மில்லியன் டொலர் என்றும் பின் பத்து மில்லியன் டொலர்என்றும்கணக்குப்போட்டாலும் இறுதியில் கனடா நாட்டின் அன்றைய மக்கள் தொகையான 24 மில்லியன் என் பதற்குச் சமமாக ஒவ்வொருவரிடமும் இருந்தும் ஒரு டொலர் வீதம் சேர்க்க வேண்டுமென முடிவு செய்திருந்தார் ஒரு செயற்கைக் காலுடனும் கொல்லும் வியாதியான புற்றுநோயுடனும் மர ணம் நெருங்கலாம் என்ற நிலையிலுள்ள 20 வயது இளைஞனான டெர்ரியின் மனவலிமை எப்படியானது என நாம் கற்பனை செய்து பார்க்கவும் முடியுமோ?

கிழக்கே நியூ பவுண்ட் லாண்டிலுள்ள சென்ற்ஜோன்என்றஇடத்தில்ஆரம்பித்து பிரிட்டி கொலம்பியாவின் விக்டோரியா என்ற இடத்தில் முடிப்பதாகத் திட்ட மிடப்பட்டது. இதன்படிடெர்ரி சுமார் 8000 கி.மீற்றர்கள் கடக்க வேண்டும். டெர்ரியின் மனத்தில் எழுந்த ஓர் எண் ணப்படி இரண்டு போத்தல்களில் அட்லான்டிக் சமுத்திரத்திலிருந்து நீர் எடுத்துக்கொண்டு மரதன் முடிவில் அதில் ஒன்றைத் தனக்கு ஞாபகார்த்தமாக வைத்துக்கொண்டு மற்றதனை பசுபிக் சமுத்திரத்தில் சேர்த்துவிட வேண்டும் என்பதற்கிணங்க எடுத்துக்கொண்டு இச் சாதனையை1980ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ம் திகதி தொடங்கினார். இவரின் தோழனான ஆல்வார்ட் (Alward) அன்பளிப்புச் செய்யப்பட்ட வாகனத்தில் உதவியாகச் சென்றார்.

கடுமையான காற்று, பனி, மழை எனப்பல இன்னல்களுக்கு மத்தியிலே அவர் இதைச் செய்யவேண்டி ஏற் பட்டது. ஆரம்பத்தில் சிறிது மன உளைச்சல் ஏற்பட்டாலும் பின்னர் தனது இலட்சியத்தின் நினைவால் அவற்றை யெல்லாம் சமாளித்துச் செயற்பட்டார். இவரின் முயற்சியைத் தடுப்பதற்குச் சிலர் முற்பட்டார்கள். வேறு சிலரோ இத னைக் கிண்டல் செய்யவும் தவறவில்லை. இதனையிட்டுச் சிறிது சினம் கொண் டாலும் தன் முயற்சியை நிறுத்த அவர் விரும்பவில்லை.

முதலில் நியூ பவுன்ட் லான்ட் மக்கள் அவரை வரவேற்று 10,000 டொலர்களை அன்பளிப்புச் செய்தனர். தனது மரதன் நிகழ்ச்சின்போது உதவி செய்யக் கூடிய மனிதர்களையும் அவர் சந்தித்தார். கீயு பெக் மாகாணத்தில் பிரெஞ்சு மொழி தெரியாததால் சிறு சிரமங்களை எதிர்நோக்கினாலும் வெற்றிகரமாக மொன்றேல் நகரைச் சென்றடைந்தார். அங்கு ஷார்ப் என்னும் ஒரு ஹோட்டல் உரிமையாளர் இவரின் செயற்பாடு பற்றிக் கேள்விப்பட்டு இவரை வந்து சந்தித்தவுடன் தனது விடுதியிலேயே சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார். நன்கொடை வழங்குபவர்கள் மிகக் குறைவாக இருந்தமையையிட்டு வருத்தம் கொண்டிருந்த டெர்ரி சற்றுத் தென்படைந்தார். ஷார்ப் என்பவர் டெர்ரி ஓடி முடிக்கும் ஒவ்வொரு மைலுக்கும் 2 டொலர் வீதம் நன்கொடை அளிப்பதாகக் கூறியதோடு சுமார் 1000 நிறுவனங்களையும் அது போலச் செய்வதற்கு ஏற்பாடு செய்தார். மொன்றேல்நகரைஅடைந்தபோதுதனது முழுத் தூரத்தில் மூன்றிலொரு பகுதியைக் கடந்திருந்தார். அத்துடன் 200,000 டொலர்களையும் நன்கொடையாகப் பெற்றிருந்தார். இவரின் மரதனின் போது கனேடிய புற்றுநோய் தவிர்ப்புச் சங்கம் இவர் கலந்து பிரசாரம் செய்யக்கூடியதாக இடையிடையே நிகழ்ச்சிகளையும் கூட்டங்களையும் ஏற்பாடு செய்திருந்தது. அவற்றில் இவர் கலந்துகொண்டு பிரசாரம் செய்யவும் தவறவில்லை யூன் மாதக் கடைசியில் அவர் ஒன்ராறியோ மாநிலத்தை அடைந்தார். வேனிற்காலமாதலால் வியர்வை அதிகமாக இருந்தது. வெப்பம் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனாலும் தன் முயற்சியைத் தொடர்ந்த டெர்ரி, ஒரு நாளுக்கு 26 மைல்கள் (42 கி.மீ) என்ற கணக்கில் கடந்து கொண்டிருந்தார். ரொரன்ரோ நகரத்தில் சுமார் பத்தாயிரம் மக்கள் அவரை வரவேற்றனர். அன்றையதினம் மட்டும் 100,000 டொலர்கள் சேர்ந்ததாக சங்கம் அறிவித்திருந்தது. இது தவிர வேறு தனிப்பட்ட நன்கொடைகளும் அன்பளிப்புகளும் டெர்ரிக்கு கிடைத்தன. இடையில் வந்த தனது 22 ஆவது பிறந்த தினத்தைக்கூட அவர் கொண்டாட மறுத்துவிட்டார். (ஜூலை 28)

மிகவும் மனம்நோகச் செய்யும் பதிவுகளும் இல்லாமலில்லை. சில ஊடகங்களில் மிகக் கேவலமாகவும் தனிப்பட்ட முறையில் டெர்ரியைத் தாக்கியும் செய்திகள் வந்தன. மிகவும் பிரபலமான Toronto star, Global ஆயடை போன்றவற்றிலேயே அச் செய்திகள் வந்திருந்தன. யாரை நம்புவது என டெர்ரி தடுமாறினார், ஆனால் அவற்றை அவர் பொருட்படுத்தவே இல்லை. ஒரு காலத்தில் இந்த நிறுவனங்கள் இரத்தக் கண்ணீர் வடித்திருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

நாளாந்த ஓட்டம் அவரின் உடலின் சக்தியை உறிஞ்சிக்கொண்டே வந்தது. இருதய நோயாளியான அவர் புற்று நோய்த் தாக்கத்தால் பல மடங்கு பல வீனப்பட்டுக் கொண்டே வந்தார். செயற்கைக் கால் இவ்வளவு கடுமையான செயற்பாட்டுக்கு மிகவும் பொருத்தம் அற்றதாகவே இருந்தது. அவரின் முழங்கால் பகுதி வீங்கிக் கொண்டு வந்தது. இடையில் ஒரு தரம் மறுகாலின் குதிப் பகுதிக்கு மேலாக விறைப்புத் தன்மையை உணர்ந்தார். அது சுகமாகும் எனத் தோன்றவில்லை. டெர்ரி இது பற்றி

பயந்தாலும் சாதாரண வலி நீக்கியால் சுகம் பெறலாம் என அறிந்தபோது மீண்டும் உற்சாகமடைந்தார்.

ஆனால் ஒகஸ்ட் மாத இறுதியில் அவர் மூச்சுத் திணறல் மற்றும் நெஞ்சு வலியால் ஓட்டத்தை ஆரம்பிக்க முடியவில்லை. கூடியிருந்த மக்கள் உற்சாகப்படுத்தியபோது ஓடத்தொடங்கினார். சில மைல்களே சென்றபோது மிகவும் கடுமையான மூச்சுத் திணறலையும் அதிகரித்த இதய நோவினையும் உணர்ந்தபோது தனது நண்பனான ஆல்வாட்டிடம் தன்னை மருத்துமனைக்கு கூட்டிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார். அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் மிகவும் அதிர்ச்சியான தகவலை அவரிடம் தெரிவித்து அவரது முயற்சியை முடிக்கும்படி வற்புறுத்திவிட்டனர். அவரின் புற்றுநோய் பரவி அவரது சுவாசப் பையை முற்றுகையிட்டிருந்தது. அன்று 1980ம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி அவர் தனது முயற்சியின் இறுதியில் இருப்பதை உணர்ந்தார்.

மறுநாள் மிகவும் துக்கமான நிலையில் தனது முயற்சியைக் கைவிடுவதாக அறிவித்ததுடன் தனக்கு நிறுவனங்களும் மக்களும் தந்த ஆதரவிற்கும் நன்கொடைகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். அதுவரையில் 143 நாட்களாகச் செயற்பட்டு 5,373 கி.மீ. (3,339 மைல்கள்) தூரத்தை அவர் கடந்திருந்தார்.

இதன்பின் தொடர்ச்சியாக கீமோ தெரபிக் சிகிச்சைக்கு உட்பட்டாலும் நோய் குணமாகவில்லை.ஏதாவது அற்புதம் நிகழ்ந்தாலேயன்றி வேறு வழியில்லை என்ற நிலையில் பாப்பரசர் ஜோன் போல் உட்பட ஏராளமானவர்கள் பிரார்த்தனை செய்தனர். எனினும் நோய் கடுமையாகி அவர் மீண்டும் றோயல் கொலம்பியன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சேர்க்கப்பட்டபோதே அவர் கோமா நிலையை அடைந்திருந்தார். 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி அதிகாலை நேரம் உறவினர் அனைவரும் அருகிருக்க அவரின் உயிர் விடைபெற்றது.

அவரின் மறைவு தொடர்பாக கனேடிய பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வில் பேசிய நாட்டின் பிரதமர் ட்ரூடோ ஒரு உற்சாகமிக்க ஆன்மாவைக்



கொண்டுள்ள ஒரு மரணித்த மனிதனை நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஒருமித்து அவரின் வாழ்வைப் போற்றவும் அவரின் மறைவுக்காக வருந்தவும் செய்வதென்பது ஒரு நாட்டின் வரலாற்றில் நிகழ்வதென்பது மிகவும் அரிதானதே... துர்திர்ஷ்டத்தினால் தோற்கடிக்கப்பட்ட ஒரு மனிதராக அவரை நாம் எண்ணவில்லை. மாறாக ஒரு உறுதியான ஆத்மா மனித அவலங்களை

சவாலாக ஏற்று வெற்றிகொள்ள முடியும் என்ற முன் உதாரணத்தை எம்முள்ளே பதியவைத்தவர்." என அவரைப் போற்றினார். அவரது இறுதி நிகழ்ச்சிகள் தேசிய தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகியது மட்டுமல்லாது பல் வேறு சமுதாயத்தினரும் அவருக்கான அஞ்சலி நிகழ்ச்சிகளை நடாத்தினர். அத்துடன் இவரின் செயற்பாட்டால் அதிக விழிப்புணர்வு அடைந்த மக்கள் மேலும் மேலும் உதவிகளைப் புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்திற்கு வழங்கி வந்தனர்.

கனடா நாட்டில் டெர் பாக்ஸ் தொடர்பாக தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் இன்றுவரை நடைபெறுகின்றன. பல வீதிகளுக்கு அவரின் பெயர் வைக்கப்பட்டது. அவரின் பெயரால் டெர்ரி பாக்ஸ் மூலவள நிலையம் ஒன்றும் செயற்படுகிறது. அவர் நினைவாக முத்திரை, நாணயம் என்பன வெளியிடப்பட்டன. சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அவரை ஒரு தேசிய வீரராக அங்கீகரித்துமுள்ளனர். அவரின் ஞாபகார்த்த நாளன்று விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இவை பற்றி எழுதுவதானால் கட்டுரை மிக நீண்டுவிடும் . தான் ஊன முள்ளவர் என்பதை டெர்ரி ஒரு போதும் ஏற்றுக்கொள்ளவில்லை அவ ரின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது ஏனையவர்கள் அதனை நிச்சயம் ஏற்றுக்கொள்ளத்தான. வேண்டும் ஒரு கால்நூற்றாண்டுகூட வாழாத அந்த இளம் உருவம் தன் சிரமங்களை நோக்காது வருங்கால சந்ததியினருக்காகச் செய்தவற்றை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர் ஊனமுற்றவர்களுக்காக மட்டும் செய்யவில்லை. புற்றுநோய் என்பது யாரையும் தாக்கலாம். ஊனமுற்றவர் என்று கருதப்பட்ட டெர்ரி சகலருக்கும் உதவக் கூடிய முயற்சியில் இறங்கி தனது இலட்சியப்பாதையில் வெற்றிபெற்றார் என்றே கருதவேண்டும்.குறிப்பிட்ட தூரத்தில் 2/3 பாகத்தை நிறைவு செய்திருந்தாலும் 24 மில்லியன் எனத் தாம் போட்ட கணக்கில் 23 மில்லியன் டொலர்கள் சேரவைத்துக்கொடுத்தமை மறக்கக் கூடிய விடயமல்ல.

உடலில் அத்தனை உபாதைகளை வைத்துக்கொண்டும் சமுதாயத்திற்கான தன் பணியைத் தாமே முன்வந்து நிறைவேற்றியமையை இன்னும் சற்றேனும் விழிப்புணர்வு கொள்ளாத சமூகத்தினர் எண்ணி வெட்கப்பட வேண்டும். அந்தநாட்டுச் சமூகத்தை விழிப்படைய வைத்ததில் டெர்ரியின் பங்கு மகத்தானது தான் என்றாலும் அந்த விழிப்புணர்வு ஏற்படக்கூடிய மனநிலையை அம்மக்கள் கொண்டிருந்தார்கள் என்பதும் நிச்சயம். எமது மனங்களை நாம் புடம்போட்டு அந்நிலை வர உதவுவோமா?


**சதானந்தசர்மா**
**திருநெல்வேலி.**

# ஊகை

சிறுகதை

முகில் கூட்டங்கள் கூடி நிறை வேற்றிய தீர்மானத்திற்கு அமைவாக மழைத் துளிகள் மண்ணை முத்த மிட்டுக் கொண்டிருந்தன. புழுதி நீரைப் பருகும் போது எழுகின்ற மணத்தை சுகமாக சுவாசித்த படியே பேருந்தில் பின் இருக்கையில் கரன் நீண்ட நாட்களுக்குப் பிறகு பஸ்ஸில் பயணிப்பது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நடைவியாபாரிகள் தம்மி டம் உள்ள பொருள்களை பஸ்ஸினுள் கூவி விற்பதற்கு முயன்று கொண் டிருந்தார்கள். காலைப் பொழுதின் கனதியை பறை சாற்றுவ்தைப்போல் வாகனங்கள் ஒலி எழுப்பியபடி வீதியில் நகர்ந்து கொண்டிருந்தன. எப்ப பஸ்ஸை எடுப்பினமோ தெரி யாது. முன்னிருக்கையில் இருந்த பயணி முணுமுணுத்தபடியே பத்திரி கையை புரட்டுவதை கரனால் உணர முடிந்தது. சற்று நேரத்துக்குள் பேருந்தில் கணிசமான பயணிகள் ஏறிக் கொண்டார்கள். ரிக்கற் எடுக்காத ஆக்கள் எடுத்துக் கொள்ளுங்கோ. நடத்துனரின் அறிவிப்பு சற்று நேரத் துக்கெல்லாம். பேருந்து புறப்படப் போகிறதென்பதை சொல்லிற்று. இருக் கைகள் நிரப்பப்படுகின்றது. அரு கில் இருப்பவரிடம் பேசலாமா...? வேணாமா....? சற்று அவகாசம் எடுப்பது நல்லதென்று மனதுக்குத் தென்பட்டது. அவன் மௌனமானபடியே தான் செய்ய வேண்டியவேலைகளைஒருகணம் பட்டியல் போட்டுக் கொண்டான். எப்படியாவது 4.00 மணிக்குள் வீட்டிற்கு வந்து விட வேண்டும். 5.00 மணிகெல்லாம் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு போகாவிட்டால் வீட்டில் பிரகண்டம் தான். மனைவியையும் பிள்ளைகளையும் நினைக்கும் போது அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. வாழ்க்கை எவ்வளவு சுகமான அனுபவம். அவனது மனம் எண்ணிக்கொள்கிறது. பேருந்து மெல்ல மெல்ல நகரத் தொடங்குகிறது. நகரின் சந்தடிமிக்க பகுதியில் ஊர்ந்து சற்று வேகமாக இப்பொழுது பேருந்து நகர்ந்து கொண்டிருக்கின்றது. இடைக் கால பாடல் ஒன்று இதமாக ஒலிக்கத் தொடங்கியது. கரன் எப்படி இருக்கிறியள்? அவனுக்கு நன்கு பரீட்சமான குரல் ஒரு கணம் திணறித்தான் போனான். என்னத் தெரியுதோ? அவசரப்பட்டு ஆள் மனதை அலசி ஒருவாறு அடையாளப்படுத்திக் கொண்டான் உங்கட பழக்கத்தை விட மாட்டியள் என்ன" கம்பஸிலமாரி எங்க கண்டாலும் என்ன தெரியுதோ என்று தான் கேக்கிறத வழக்கமாகக் கொண்டிருக்கிறியள். நீங்கள் எப்படி இருக்கிறீங்கமைதிலி?தான்அடையாளம் கண்டு விட்டதை வெளிப்படுத்துமாப் போல் கேள்வியைத் தொடுத்துவிட்டு மௌனமானான் கரன். Sorry கரன் கனநாள் தானே நாங்கள் சந்தித்து மறந் திருப்பியல் என நினைச்சன்.

அவள் கூறியதிலிருந்தே தான் தொடுத்த கேள்விக்காக வருத்தப்படுகிறாள்




என்பதை கரனால் புரிந்து கொள்ள முடிந்தது. ச்சீ... நான் நான் சும்மா சொன்னான். நான் என்றாலும் இப்படித்தான் கேட்டிருப்பன் என்று கூறி சிரித்தான் கரன். பேருந்து நிதானமாக நகர்ந்து கொண்டிருந்தது. நீண்ட காலத்துக்குப் பிறகு ஏற்பட்ட சந்திப்பு. பல்கலைக்கழக கால நினைவுகளை இருவரும் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். பல்கலைக்கழக விரிவுரைகள், நண்பர்களின் நகைச்சுவைகள், படித்த காலத்தில் இடம்பெற்ற துயரமான சம்பவங்களென உரையாடல் நீண்டு கொண்டேயிருந்தது.... நான் அநேகமாக எங்களோடு படிச்ச ஆக்களை சந்திச்சிருக்கிறேன். உங்களைப் பற்றி விசாரிச்சும் என்னால தொடர்பு எடுக்க முடியாது போச்சுது. இன்றையநாள் பஸ்பிரயாணம் உண்மையில் என்ர வாழ்க்கையில் மறக்க முடியாது என்றான் கரன். உண்மையில் கரன் நானும் அப்படித்தான் நினைக்கிறன். எங்களில கனபேர் வேற வேற சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கனபேர் எங்களை விட்டு இல்லாமலும் போட்டினம். அவள் கூறியபடியே எச்சிலை விழுங்கிக் கொண்டாள். சில மணித்துளிகள் மௌனத்திலேயே கரைந்தன. மீண்டும் கரன் தான் பேசத் தொடங்கினான். இப்ப என்ன செய்து கொண்டிருக்கிறியள் மைதிலி? நான் ரீச்சராக இருக்கிறேன். உங்கடபாடு எப்படி? நானும் உங்களை மாதிரி தான் மாணவர்களோடு காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறேன். பல்கலைக் கழகத்தில் படிக்கேக்க நான் சொல்லச் சொல்ல நீங்கள் கைபட எழுதின கதைகளும் கவிதைகளும் இப்பவும் என்னட்ட பத்திரமா இருக்கு. அதெல்லாம் ஒரு காலம் கரன். மைதிலியிடமிருந்து பெரு மூச்சொன்று விடைபெற்றுக்கொள்கிறது. கரனின் கவனக்கலைப்பான் அலறுகிறது. ஹலோ ஓம் ஓம் எப்படியென்றாலும் 4 மணிக்குள் வரப் பார்க்கிறேன். மனைவியின் கண்டிப்பான நினைவூட்டலுக்கு பதிலளித்து விட்டு அதனைப் பத்திரப் படுத்திக்கொண்டான். என்ன அவசரம் நீங்கள் திரும்பனும் போலகிடக்கு மைதிலி தான் கேட்டாள். ஓம் ஓம் பின்னேரம் 5 மணிக்கு போகவேண்டும். எண்டு ஹோல் அடிக்கிறா. நல்லது நீங்க கலியாணம் கட்டியாச்சோ கரன்? இந்தக் கேள்வி பாக் (Bag) ஓட வெளிக்கிடக்க சந்தைக்கோ போறியள் என்று கேட்ட மாதிரி கிடக்கு என்று சொல்லிச் சிரித்தான் கரன். இந்தக் கதை இன்னும் உங்களிட்ட குறையல்ல என்ன என்ற படியே

உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்று கேட்டாள். இரண்டு பேர் மைதிலி. தலை நரைத்திருக்கேக்கேயே நான் யோசிச்சனான். மைதிலியின் கதையும் அப்படியேதான் இருக்குது. கதையளவில் இப்பவும் நான் அப்படியே தான் இருக்கிறன். மைதிலி என்ன சொல்ல வருகிறாய்? புரிந்து கொள்வதற்கான எந்தவித முயற்சியையும் எடுக்கும் நிலையில் இப்போது கரன் இல்லை. அவன் இறங்கிக்கொள்ள வேண்டிய இடம் நெருங்கிக் கொண்டிருந்தது. கரன் நான் இப்போ கை அறுந்த நிலையிலேயே தான் இருக்கிறன். கரனுக்குப் பகீர் என்றது. ஏன் மைதிலி இப்படிச் சொல்லுகிறாய்? என்னவாக இருக்கும்? தொடர் நாடகம் இடையில் நிறுத்தப்படுகின்ற போது இருக்கின்ற மனநிலையையும் தாண்டிய மன உணர்வினுள் அவன் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான் .
ஏன் மைதிலி இப்படிச் சொன்னியள்? ஏதோ ஒரு இடருக்குள் மைதிலி அகப்பட்டிருக்கிறாள் என்பதை மட்டும் கரனால் அனுமானிக்க முடிந்தது.
மைதிலி தான் பேசத் தொடங்கினாள் கரன் கடுமையாய் ஒன்றும் யோசியாதையுங்கோ. கடைசியாய் நடந்த சண்டையில் என்ர வலக்கையை நான் மணிக்கட்டோட இழந்துட்டன். மற்றாக்களின் துயரத்தோடு பார்க்கேக்க இது மிகச் சிறியதாகவே தான் உணருகிறேன். வாழ்க்கை ஒரு நேர்கோடில்லை கரன். அதில நெளிவு, சுழிவுகள் சிலருக்கு இருக்கும். அது சிலருக்கு அபத்தமா இருக்கும். சிலருக்கு அது அலங்காரமா தெரியும். எதையும் நாங்க பார்க்கிற பார்வையிலும், எதிர்கொள்ளும்முறையி



லும் தான் தங்கியிருக்கு. அவளிடமிருந்து வந்த வார்த்தைகள் கரனை ஒரு கணம் நிலைகுலையச் செய்தது. ஆனால் இறுதியில் தொனித்த அவளின் நம்பிக்கையான வார்த்தைகள் வாழ்க்கையை எதிர்கொள்ளும் திறனை கொண் டிருக்கிறாள் என்பதனை கரனுக்கு உணர்த்திற்று. யுத்தம் எத்தனையோ பேரின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கிறது என்பதற்கு சாட்சியமாய் மைதிலியும் திகழ்வதாய் கரனுக்குப் பட்டது. மைதிலி நான் கட்டாயம் திரும்பவும் சந்திக்க வேண்டும். சந்திப்பன் தொலைபேசி இலக்கத்தை அவளிடம் இருந்து பெற்றக்கொள்கிறான் கரன். அவளிடமிருந்து விடைபெற்றுவாறு பஸ்தரிப்பிடத்தில் கரன் இங்கிக் கொள்கிறான். அவனது மனம் கனத்திருந்தது வானத்து முகில்களைப் போல...

**முகமாலை**
**- சேகர்**





### பட்டமளிப்பு விழா

ஜனவரி 09, 10 2014 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது மாற்றுத்திறனாளிகளான திரு. யோ. சுதாகரன், செல்வி மா.இராசலக்சுமி, செல்வி கி.ரேகா, செல்வி தினுஷா ஆகியோர் கலைத்துறையில் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

### மாற்றுத்திறனாளிகள் தினம்



கருவி மாற்றுத்திறனாளிகள்சமூக வள நிலையம் “சர்வதேச மாற்றுதிறனாளிகள் தினம் 2013” நிகழ்வுகளை கடந்த 07.12.2013 அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தி இருந்தது. கருவி நிறுவனத்தின் தலைவர் திரு.க. தர்மசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு. என். சண்முகலிங்கன் அவர்களும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்



திரு கே.எம். ஈஸ்வரதேவன் அவர்களும் கௌரவ விருந்தினராக சமூக சேவை பணிப்பாளர்திருமதிநளாயினிஇன்பராஜ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்விலேயே முதலாவது வலு சஞ்சிகை வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலைய அங்கத்தவர்களின் இசைக் கருவி ஆற்றுகையும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சமாதான நீதிவான்

பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஆகிய திரு. ஆறுமுகம் ரவீந்திரன் என்பவர் சமாதான நீதிவானாக கடந்த 20.12.2013 அன்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திரு. ஜெ.கஜநிதிபாலன்முன்னிலையில்பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். யாழ். பல்கலைக்கழக கலைப்பட்டதாரி ஆகிய

இவர் தற்போது கோப்பாய் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராகவும் சுன்னா கத்தில் உள்ள வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில் வாழ்வக தலைவராகவும் உள்ளார்.தமிழ்பேசும் பார்வையற்றவர்களில் முதலாவது சமா தான நீதிவானாக ரவீந்திரன் அவர்கள் பதவியேற்றிருப்பதுமாற்றுத்திறனாளிகள் ஆற்றிவருகின்ற சமூகப் பணிக்கு கிடைத்த அங்கீகாரமாகக் கருதமுடியும் என சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இவருக்கு வலு சஞ்சிகையும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

### கற்றல் உபகரணம் வழங்கல்

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாண கிளை அங்கத்தவர்களின் பாடசாலைகளில் கல்வி பயிலும் 70 பிள்ளைகளுக்கு கடந்த 29.12.2013 இல் யாழ் நகர் மத்தி றோட்டறிக் கழகத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கி இருந்தனர். யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் யாழ் நகர் மத்தி றோட்டறிக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், கழகத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாகிகள் அங்கத்தவர்கள் பிள்ளைகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

### நிறுவுனர் நினைவு நாளும் பரிசுத் தினமும்

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தி இயங்கும் வாழ்வகம் (விழிப்புல வலு விழந்தோர் இல்லத்தின்) நிறுவுனர் உதய நாளும் பரிசுத் தினமும் கடந்த 11.01.2014 இல் வாழ்வகத்தின் தலைவர் திரு. ஆ.ரவீந்திரன் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் உதவிசெய லாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ் தியான் அவர்களும் சிறப்பு அதிதிகளாக திரு. செ.சுப்பிரமணியம் (விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் வவுனியா தெற்கு வலயம்) திரு.க.இந்திரவாசன் (ஹற்றன் நஷனல் வங்கி பிராந்திய முகாமையாளர் வடபிராந்தியம்), திரு.வ.சுரேஷ்குமார் (சமூகசேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) திரு. ஜே.எஸ். அலெக்ஸ் நிக்சன் (உரிமையாளர் ஆசீர் வாதம் புத்தகசாலை) ஆகியோரும் கௌரவ அதிதியாக தெல்லிப்பழை துர்க் காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் பரீட்சைகளில் சித்தி யடைந்த மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் சாதனைகள் படைத்த வாழ்வக மாணவர்கள் பரிசில்கள்வழங் கிக் கௌரவிக்கப்பட்டனர்வாழ்வகத்தை ஸ்தாபித்த அமரர் அன்னலக்சுமி சின்னத் தம்பி அம்மையார்அவர்களின் பிறந்த தினமே வாழ்வகபரிசளிப்பு தினமாக கொண்டாடப்பட்டுவருகின்றது.


### பார்வையற்றோர் நலப்பணியில் வன்னி விழிப்புலனற்றோர் சங்கம்

பார்வையற்றவர்களின்நலப்பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் வன்னி விழிப் புலனற்றோர் சங்கம் பல நலப்பணிகளை செயற்படுத்தி வருகின்றது. தற்போது 198 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள இவ் அமைப்பின் மூலம் 130 பேருக்கு தலா 3500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் சுழற்சி முறையில் மாதாந்தம் வழங்கப்பட்டு வருவதாக வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் S. ரூபராஜ் தெரிவித்துள்ளார்.

# முற்றத்து மல்லிகை

## சசிகலா பத்மநாதன்

வெம்மை தணிந்திருந்த இனிதான அந்த மதியப் பொழுதில் முற்றத்துமல்லிகை பகுதி நேர்காணலுக்காக அந்த முக்கிய மனிதரைச் சந்திக்க கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவளநிலையத்தினுள் நுழைகின்றேன். அங்கு குறிப்பிட்ட நேரத்திற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக வருகை தந்திருந்தார் செல்வி சசிகலா பத்மநாதன். ஒரு பெண்ணின் நேர்காணலைப் பதிவாக்கம் செய்வதைத் திருப்தியாக உணர்ந்தபடியே செல்வி சசிகலா பத்மநாதன் அவர்களோடு பேசத் தொடங்கினேன்.



வணக்கம் சசிகலா பத்மநாதன்

வலுவின் முற்றத்து மல்லிகைக்காக உங்களைச் சந்திப்பதில் மட்டில்லா மகிழ்வடைகிறேன்.

வணக்கம்!

கேள்வி 01 -

உங்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுங்கள்

பதில்...எனதுதந்தையார்பத்மாநாதன். தாயார் கமலேஸ்வரி எனக்கு மூன்று சகோதரர்கள். யாழ்ப்பாணம் பலாலி வீதி 2 ம் ஒழுங்கையில் வசித்து வரும் நான் தற்போது நல்லூர் பிரதேச செயலகத்தில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றி வருகின்றேன்.

கேள்வி 02 -

உங்களது கால் பாதிப்புற்றமை பற்றிக் கூற முடியுமா?

பதில்... ஆம் நான் ஒன்பது மாத குழந்தையாக இருக்கும் போது ஒரு காய்ச்சல் ஏற்பட்டது, அதனால் என்னை தனியார் மருத்துமனை ஒன்றில் அனுமதித்தார்கள் அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ கிகிச்சையின் போது அதீத மருந்து பாவனை காரணமாக எனது இரு கால்களும் ஒரு கையும் செயலிழந்தன. பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பயிற்சிகள் என்பவற்றின் பயனாக செயலிழந்த எனது ஒரு கையும் ஒரு காலும் செயற்றிறன் மிக்கதாக மாற்றம் அடைந்தது.

கேள்வி 3-

உங்களது கற்றல் செயற்பாடுகள் பற்றிக் கூறுங்கள்

பதில்... எனது கற்றல் செயற்பாடுகளுக்கு பெற்றோரும் சகோதரர்களும் நண்பிகளும் பெரும் ஊக்க சக்தியாக இருந்தார்கள். எனது ஆரம்பக் கல்வியை யாழ். சென்மேரிஸ் வித்தியாலயத்திலும் தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரையான கல்வியை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் பயின்று க.பொ.த. சாதாரணதரம்,

க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்து பல் கலைக்கழகம் சென்றேன்.

கேள்வி 04 -

உங்கள் பட்டப்படிப்புகள் பற்றியும் ஏனைய கற்றல் செயற்பாடுகள் பற்றியும் கூறுங்கள்.

பதில்.... நான் யாழ் .பல்கலைக்கழகத் தில்கலைப்பிரிவில்கற்றுபுவியியல்சிறப்பு கலைமானிப் பட்டத்தை பெற்றுள்ளேன். மேலும் பிராந்திய திட்டமிடல் கற்கை நெறியில் முதுமானிப் பட்டத்தினையும் M.A. பெற்றுள்ளேன். தற்போது இணை யத்தினூடாக காலநிலை மாற்றம் தொடர்பான கற்றைநெறி ஒன்றை பூர்த்தி செய்துள்ளேன். மற்றும் கனணி வடிவமைப்பு தொடர்பான கற்கை நெறி யினையும் பயின்றுள்ளேன்.

கேள்வி 05 -

உங்களுக்கு கலைத்துறையில் உள்ள ஈடுபாடுகள் பற்றி சொல்லுங்கள்

பதில்... நான் கவிதைகள், கட்டுரைகள்



சசிகலா பத்மநாதன்

என்பன ஓரளவு எழுதுவேன். எனது கவிதைகள் சில பத்திரிகைகளில் பிர சுரமாகி இருக்கின்றன. மேலும் சில வானொலிகளிலும் ஒலிபரப்பாகி இருக் கின்றன.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கின்ற போது கலை வாரத்தை ஒட்டி நடை பெற்ற கவியரங்கில் பங்குபற்றி முதலி டம் பெற்றுள்ளேன். புவிதினம் தொடர்பான எனது கட்டுரைகள், சஞ் சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றில் பிர சுரமாயுள்ளன.

கேள்வி 06 -

விளையாட்டுத்துறையில் தங்களுக்கு ஆர்வம் உண்டா?

பதில்.... எனக்கு சதுரங்கம் விளை யாடுவதில்ஆர்வம்உள்ளது. அண்மையில் பிரதேசசெயலக மட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இருந்து கலந்துகொண்ட 6 பேர் கொண்ட சதுரங்கக்குழுவில் நானும் ஒருவராக பங்குபற்றி உள்ளேன்.

கேள்வி 7 -

நீங்கள் தற்போது கல்வி முதுமானி M.A. பட்டதாரியாகவும் நல்லூர் பிரதேச செயலகத்தில் காணி அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் உள்ளீர்கள் இவ் வாறான உயரிய நிலைக்கு வருவதற்கு உதவியவர்கள் பற்றி கூற முடியுமா?

பதில்... ஆம் நான் இவ்வாறான உயரிய நிலைக்கு வருவதற்கு எனது தாயார் பெரிதும் துணைபுரிந்துள்ளார். மேலும் எனது சகோதர சகோதரிகள் அயலவர்கள், நண்பிகள் போன்றோர்களது உதவிகளும் குறிப்பிடத்தக்கன. குறிப்பாக எனது

கற்றல்செயற்பாடுகளுக்கு உதவிய நண்பி களான சதீயா, சுதர்மினி போன்றோ ரையும்மற்றும் பல்கலைக்கழக கல்வி யைத் தொடர்வதற்கு வகைசெய்த ஆசிரியர் குணராசா (செங்கை ஆழியான்) அவர்களையும் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தில் புவியியல் தகவல் ஒழுங்கு எனும் பாடப் பரப்பில் ஆய்வினை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கிய ஆசிரியர் விரிவுரையாளர் சுதாகர் அவர்களையும் எனது ஏனைய ஆளுமை செயற்பாடுகளுக்கு உதவிய நல்லூர் பிரதேச செயலர் மதிப்பார்ந்த ப.செந்தில்நந்தனன் மற்றும் அங்கு பணி யாற்றும் சக நண்பர்களையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

கேள்வி 08

உங்களது வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள் யாதேனும் உண்டா?

பதில்.... ஆம் எனது வாழ்வில் எனது 20 ஆவது அகவை நாள் மறக்க முடியாத ஒரு நாள்.. அன்று வெளிநாடு சென்று ஆறுமாத காலமாக எதுவித தொடர்பும் அற்று இருந்த எனது சகோதரி உடனான தொடர்பு கிடைத்தது. அத்தோடு அன்றையதினத்தில் எனது ஆசான் செங்கை ஆழியான் அவர்களுக்கு அவர் களது படைப்புக்கள் தொடர்பாக நான் எழுதிய கடிதங்களுக்கு முதன்முதலாக பதில்கடிதம்கிடைத்தது. அத்தோடுஅன்று மாலைஇலங்கைஒலிபரப்பு கூட்டுத்தாபன சர்வதேச ஒலிபரப்பு சேவையில் எனது கவிதை ஒலிபரப்பாகியது. இந்த மூன்று நிகழ்வுகளும் இடம்பெற்ற என் பிறந்த நாளாகிய அந்நாள் என் வாழ்வில் மறக்க முடியாத ஓர் நாளாகும்.

கேள்வி 9

உங்களை கவர்ந்த ஆளுமைமிக்க மனி தர்கள் எவராவது இருப்பின் அவர் பற்றி கூறுங்கள்.

பதில்..... ஆசிரியர் குணராசா (செங்கை ஆழியான்) அவர்களின் ஆளுமையால் நான் பெரிதும் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். அவரது எழுத்து ஆளுமையும் கற்பிக்கும் திறனும் என்னை ஆச்சரியப்பட வைத் திருக்கின்றன. "எவ்வளவு பெரிய மனி தர்களும் சாதாரண மனிதர்கள் தான் அவர்களால் முடியும் என்றால் எம்மால் ஏன் முடியாது" என அவர் அடிக்கடி கூறும் வார்த்தைகள் என் வாழ்வில் இடர் களை எதிர்கொள்ளும் சமயங்களில் தெம் பூட்டுவனவாய் இருந்திருக்கின்றன.

நாம் இடம்பெயர்ந்து இருந்த போது பல்கலைக்கழக கல்வியை நான் தொடர முடியும் என்ற செய்தியை எனக்கு அறி வித்து எனது வாழ்விற்கு ஒரு திருப்பு முனையை குணராசா ஆசிரியர் அவர்கள் ஏற்படுத்தியதை நான் இங்கு சிறப்புற குறிப்பிட விரும்புகின்றேன்.

கேள்வி 10-

வலு இழப்புடன் கூடிய நபர்கள் தொடர்பான சமுதாயத்தின் பார்வை எவ்வாறு உள்ளது என நீங்கள் கருது கிறீர்கள்?

பதில்... இன்றைய சமுதாயம் மாற்றுத் திறனாளிகளை ஒரு வேறுபட்ட நபராக பார்ப்பதாகவே நான் கருதுகின்றேன். இந்த நிலை மாறி தம்முள் ஒருவராக பார்க்க வேண்டும். என்பதே எனது எதிர் பார்ப்பு.

கேள்வி 11 -

நீங்கள் உங்களது பொதுவான நட

வடிக்கைகளின் போது எதிர்கொள்ளும் இடையூறுகளையும் அதற்காக நீங்கள் எதிர்பார்க்கும் தீர்வுகள் பற்றியும் குறிப் பிடுங்கள்.

பதில்.. பொதுவாக எம் போன்றவர்கள் வாகனங்களில் ஏறும் போது சற்று சிர மங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது. எனவே வாகன பயணங்களின் போது உரியவர்கள் எமக்கு முன்னுரிமை வழங்கினால் நன் றாக இருக்கும். பொதுவாக கட்ட டங்களில் ஏறும்போது அங்குள்ள படி அமைப்புக்கள் எமக்கு பாதகமாக அமைந்துள்ளன. எனவே நாங்களும் இலகுவாக சென்று வரக்கூடிய சரிவுப் படிகள் அமைத்தால் நன்றாக இருக்கும். மேலும் அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்களில் மாற்றுத்திறனாளிகள் பயன் படுத்தக்கூடிய வகையிலான வசதிகள் செய்யப்பட வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகு வசதிகள் ஓர ளவு நிறைவைத் தருவனவாய் உள்ளன.

கேள்வி 12 -

தாங்கள் வலுவிழப்புடன் கூடிய நபர்களாக இருக்கிற பெண்களுக்கு கூற விரும்பும் செய்தி யாதேனும் உண்டா?

பதில்... ஒவ்வொரு மாற்றுத்திறனாளி பெண்களும் ஊனத்தை தடையாக கருதாது நம்பிக்கையுடன் வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும். அத் தோடு கல்வியிலும் முன்னேற்றம் காண வேண்டும். நீங்கள் பிறரில் தங்கி இருக் காது பிறர் உங்களில் தங்கிருக்கும் நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளாக இருக்கின்ற பெண்கள் ஒவ்வொருவரும் தங்களை தற்காத்து கொள்ளக் கூடியவர்களாக தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். சமூகத்தில் வாழ்கின்ற பெண்கள் கொண்டுள்ள விழிப்புணர்வு நிலையிலும் பார்க்க கூடியளவு விழிப்புணர்வினை வலுவிழப்புடன் கூடிய பெண்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

நன்றி சசிகலா பத்மநாதன் . உங்கள் வாழ்வு வளம் பெற வலுவின் பிரார்த் தனைகள் என்றும் உடன் இருக்கும். மதிய பொழுதின் சூரிய கதிர்கள் பூமிப் பரப்பில் படர்ந்து கொண்டிருக்க சசிகலா பத்மநாதன் உடனான நேர்காணலை நிறைவு செய்கின்றோம்.

நன்றி

வலுவின் முற்றத்து மல்லிகை பகுதிக்காக

**திரு.நா. கீதாகிருஷ்ணன்.**

# எழுதுங்கள் வெல்லுங்கள்

1. இலங்கை கல்வி அமைச்சில் விசேட கல்விப் பிரிவு எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

2. விழிப்புலன் அற்றோர் பயன்படுத்தும் எழுத்தின் பெயர் என்ன?

3. 2010 ஆம் ஆண்டு எதேன்ஸ் நகரில் இடம்பெற்ற விசேட தேவைக்குட்பட்டோருக்கான ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற இலங்கை வீரர் யார்?

4. இலங்கையில் விழிப்புலன் மற்றும் செவிப்புலன் இழந்தோருக்காக அமைக்கப்பட் முதலாவது விடுதிப் பாடசாலை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

5. இலியட் ஒடிசி என்ற காவியத்தை படைத்த ஹோமர் என்பவர் எவ்வகை அங்கக்குறைபாடு உள்ளவர்?

6. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உடல் ஊனமுற்றோருக்கான கல்வி சிந்தனை தோற்றம் பெற்றது. இச் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த பெண்மணி யார்?

7. 'கெலன் கெலர்' எப்போது பிறந்தார்?

8. ஐ.நா. சபையினால் குறிப்பிட்ட 2013 ஆம் ஆண்டு சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்துக்கான தொனிப்பொருள் யாது?

9. வெள்ளைப் பிரம்பினை கண்டு பிடித்தவர் யார்?

10. இலங்கையில் வலுவிழந்தவர்களுக்கான சேவைகளை முன்னெடுத்து வரும் அமைச்சின் பெயர் என்ன?

இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள் இப்படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விடைகள் 31.05.2014 இற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு முதல் பக்கத்திலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

01......................................................................................................................

02......................................................................................................................

03......................................................................................................................

04......................................................................................................................

05......................................................................................................................

06......................................................................................................................

07......................................................................................................................

08......................................................................................................................

09......................................................................................................................

10......................................................................................................................

1. முழுப்பெயர் : ..........................................................................................

2. தபால் முகவரி: ..........................................................................................

3. தொலைபேசி இலக்கம்: ...............................................................................

4. பிறந்த ஆண்டு, மாதம், திகதி: ....................................................................

எழுதுங்கள் வெல்லுங்கள்

**இதழ் போட்டி இல.1 விடைகள்**

1. 1981
2. சைகை மொழி
3. ஒக்டோபர் 15
4. பரா ஒலிம்பிக்
5. ஜெயப்பூர் வாழ்வகம்
6. திருடராட்ணன்
7. செனத் அத்தநாயக்கா
8. சுதா சந்திரன்
9. செவிப்புலன்
10. மாலா ரன்யான

**அனுப்ப வேண்டிய முகவரி**

எழுதுங்கள் வெல்லுங்கள்
கருவி
மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
இல.1166/15
அருளம்பலம் வீதி
நல்லூர் வடக்கு
யாழ்ப்பாணம்

**வெற்றியாளர்கள்**

1 ம் இடம் - ஆர்த்திகா புஸ்பலிங்கம்
2ம் இடம் - விஜயலாதன் விஜயகுமார்
3ம் இடம் - சண்முகி தில்லைநாதன்

**ஆறுதல் பரிசு**

தணிகைவாசன் நித்தியா
தயாமினி குபேரமூர்த்தி
யதுஷா விஜேந்திரன்
திவேதிகா பரமேஸ்வரன்

# எண்ணக்கிண்ணம்

## மதிப்பளிப்போம்

உள்ளத்தில் உறுதி ஏற்று
உணர்வுகளை தமதாக்கி
உண்மையினை தெளிவாக்கி
உயரவுடனே மதிப்பளிப்போம்
கண்கள் தெரியவில்லை என்று
கனவை கலைக்க வேண்டாம்
கால்கள் ஊனம் என்று
கொள்கையை குலைக்க வேண்டாம்
ஊமை என்று நீ
உணர்வுகளை முடக்க வேண்டாம்
காது கேளாது என்று நீ
கவலை கொள்ள வேண்டாம்
மாற்று வலு உள்ளோரை மனதார
நேசிப்போம்
உறவாட இடம்கொடுப்போம்
உணர்வுக்கு மதிப்பளிப்போம்

கலாதேவி ஆசிரியை
சண்டிலிப்பாய்.

## சாதனைகள் செய்திடுவோம்

என்னால் முடியும் தோழா
நம்பிக்கை ஒன்று தான்
எந்நாளும் எங்களது இலட்சியம்
பொன்னாலும் பொருளாலும்
சாதிக்க முடியாததை
என்னால் முடியும் என்ற எண்ணத்தில்
வென்றிடலாம்!!!!!
காலாலே பேனை பிடித்து
கையில்லார் எழுதுவதும்
வாயாலே தூரிகையால்
ஓவியங்கள் தீட்டுவதும்
காலில்லார் பொய்க்காலால்
கருமங்கள் ஆற்றுவதும்
கண்ணில்லார் கல்வியிலே
உயர்வதையும் காண்கிறீரே!
நம்பிக்கை உள்ளவரை
ஊனம் ஒரு குறையன்று
பாரினிலே நீயும்
மாற்று வலு கொண்டு
சோதனைகள் வென்று சாதனைகள்
படைத்திடலாம்.

தயாமினி , உடுவில்.

## ஊனம் என்பது

மனிதா! நீ உன் கையை இழந்தால்
அதுவல்ல ஊனம் - நீ
உன் நம்பிக்கையை இழந்தால்
அது தான் ஊனம்
மனிதா ! உன் கண்
இல்லையானால்
அதுவல்ல ஊனம் - நீ
உன் மனக்கண்ணை மூடினால்
அது தான் ஊனம்
மனிதா! உன் காலை இழந்தால்
அதுவல்ல ஊனம் - நீ
பிறர் காலில் விழுந்தால்
அது தான் ஊனம்
மனிதா நீ பேசாமல் இருந்தால்
அதுவல்ல ஊனம்- உன்
பேச்சால் பிறர் காயப்பட்டால்
அது தான் ஊனம்
மனிதா உன் உள்ளம் ஊனம்
ஆகாதவரை
உடல் ஊனம் ஊனமன்று.

Mafasa. Jaffna

## விழித்திடுவீர்

மாநிலத்தில் மானிடராய்
பிறந்திட்ட மானிடரே
மகத்தான வாழ்விற்காய்
இன்றே விழித்திடுவீர்
ஊனுடம்பில் ஊனமில்லை
உள்ளத்திலும் குறையுமில்லை
உன்னதப் பிறவியன்று
இன்றே விழித்திடுவீர்
கண்களில் பார்வையில்லை
செவிகளில் கேள்மையில்லை
நாவினில் பேச்சில்லை
ஆனால் உள்ளத்தில் தளர்வுமில்லை
புறவிழியை நாம் இழந்தால்
வெண்பிரம்பு வழிகாட்டும்
கேள்மையை நாமிழந்தால்
இயந்திரம் வழிகாட்டும்
இறைவனின் படைப்பில்
இனியதோர் பிறவி நாம்
இனியும் தூங்குவதை
இன்றோடு நிறுத்தி விடு
காலம் நம் பக்கம்
கடவுளருள் நமக்குண்டு
நல்ல கல்வி நாம் பெற்றால்
நல்வாழ்வு நமக்குண்டு
மாற்று வலுவுடையதோர்
மனிதராய் வாழ்ந்திடவே
விழித்திடுவீர் விழித்திடுவீர்
இன்றே விழித்தெழுவீர்.

பொ.தீபன்,
யூனியன் கல்லூரி

## சாதனை மனிதர்கள்

என்றோ ஒரு நாள்
ஏங்கி வாழ்ந்த உம்மை
இன்று எம் கரம் கொண்டு
ஏந்தி நிற்கின்றோம்
ஏற்றம் பெற்று
எல்லோரும் போல நீரும்
எல்லா உரிமையும் பெற்று
எம்மைப்போல் வாழ
உள்ளத்தில் துணிவால்
உமது சாதனைகள்
ஒன்றா? இரண்டா?
வானில் பறந்து வட்டமிடுகிறாய்
கணனி கற்கிறாய்
பள்ளிப்படிப்பு உன்னை
படி ஏற வைக்கும்
பல்கலையும் பெற்று
பட்டம்பெற்று
பாரினில் பற்பல பதவிகள் பெற்று
பாரோர் புரியாத
பல சாதனைகள் படைத்திடும் நீ
மாற்றுவலு கொண்ட ஒரு
சாதனை மனிதன் தான்

இ. கிருத்திகா
புற்றாலை மகா வித்தியாலயம்

## மாறும் உலகின் திறமைசாலிகள்

சிட்டாய் பறந்து திரியும் நாம்
மொட்டிலே வாடுவது
போர் செய்த
போக்கிரித்தனத்தாலா?
தொட்டில் இட்ட தாயும்
தோளில் இட்ட தந்தையும்
மாற்றுத் திறனாளிகளாய்
மரணவாயிலிலே
காலத்தின் கண்ணோட்டத்தில்
கைகளுக்கோ
உயிரோட்டமில்லை

அதனால் நான் ஒரு மாற்றுதிறனாளி
சுதந்திர சிட்டுக்களாய்
மனிதன் பரிணமித்த காலம்
மலிந்து போனது ஏனோ?
சிதைந்து போன வாழ்வை
சீர் செய்வது யாரோ ?
உலகைப் படைத்த பிரமன்
ஊனத்தை படைத்தது ஏனோ?
தொலைந்த வாழ்வை
விலைபேசி விற்றது யுத்தம்
எனும் கொடூரன்
காலத்தால் வெல்வது சாத்தியமாகாது
கடந்து போனது நடந்து முடிந்ததை
விழத்தெழு மனிதா நாளை நமக்குரிய
உலகம் உன்னை நம்பும் நீ
உழைப்பை நம்பு
விதைத்தது விதையாக இருந்தால் நாம்
இனி மாற்றுத்திறனாளிகள் அல்ல
மாறும் உலகின் திறமை சாலிகள்

சிவானந்தம் கோமகள்
யாழ். புற்றாலை மகாவித்தயாலயம்

# வலுவிடம் கேளுங்கள்...!

**குமார் - முல்லைத்தீவு**

**கேள்வி:-** எனது நண்பர் ஒருவரின் 7 வயதுப் பிள்ளை பார்வையற்ற நிலையில் உள்ளார். வீட்டில் ஒரு பிள்ளை என்பதால் பெற்றோர் விடுதியில் சேர்த்து கற்பிக்க விருப்பமற்று உள்ளனர். இவர்களது கிராமப் பாடசாலையில் இப்பிள்ளையைச் சேர்த்து கற்பிப்பதற்கு உரிய வசதிகள் இல்லை. எனவே இப் பிள்ளைக்கு எவ்வாறு கல்வி வழங்கலாம்?

**பதில்:-** குமார், மாற்றுவலுவினருக்கான கல்வி திட்டம் சீராக நடைமுறையிலுள்ள பாடசாலை ஒன்றில் இப்பிள்ளையை இணைத்து கல்வி கற்பிக்கலாம். பெற்றோரை விழிப்புணர்வூட்டி விழிப்புலனற்றவர்களுக்காக செயற்படுகின்ற நிறுவனங்களில் அப் பிள்ளையை இணைத்து பிறெயிலி மற்றும் ஏனைய விடயங்களை பிள்ளை கற்கும் வகை செய்யலாம். விரும்பினால் பிள்ளை ஏனைய மாணவர்களோடு இணைந்து கற்கும் திறனைப் பெற்ற பின்னர் வீட்டில் வைத்து கல்வி வழங்கலாம்.

**மட்டக்களப்பு றமேஸ்**

**கேள்வி:-**அங்கவீனமுற்ற ஆட்களுக்கான தேசிய சபையின் பணிகள் பற்றி கூறமுடியுமா?

**பதில்:-**வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கான சட்ட உருவாக்கம் தொடர்பான பரிந்துரைகளை அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளுதல் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு இடப்படாத போது அவற்றைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அச்சட்ட ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரும் வகையில் அங்கவீனமுற்ற ஆட்களுக்கான தேசிய சபையின் பணிகள் அமைந்துள்ளன.


SARANGA
MONEY EXCHANGE PVT (Ltd)
சாரங்கா
நகைமாடம்
(அரச அங்கீகாரம் பெற்ற
வெளிநாட்டு நாணய மாற்றுனர்)
சாரங்கன்
நகையகம்
157/ 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 6972



கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்
மாற்றுத்திறனாளிகளை சமூக விருத்தியின்
ஆரோக்கியமான பங்காளர்களாக மாற்றுதலை நோக்காகக் கொண்டு
பணியாற்றி வருகின்ற ஒரு சமூகப்பணி நிறுவனம் ஆகும்.
வலுவிழப்புடன் கூடிய நபர்களின் ஆரோக்கியமான இருத்தலுக்கான சாத்
தியப்பாடுகளை முன்னிறுத்திய பணிகளை கருவி முன்னெடுத்துக்கொண்டு
இருக்கிறது. வலுவிழப்புடன் கூடிய நபர்கள் சேவை பெறுநர்கள் என்ற
நிலையில் இருந்து சேவை வழங்குநர்களாக மாறுவதற்கான
வாய்ப்புக்களை கருவி வழங்குகின்றது.

அன்பு உள்ளங்களே மாற்றுத்திறனாளிகளின் நிரந்தரமான வாழ்வாதாரக்
கட்டமைப்புக்கான பொறி முறையினை கருவி சமூகவள நிலையம் கொண்
டிருக்கின்றது. கருவி சமூக வள நிலையத்தின் பணிகளோடு நீங்களும்
கரம்கோர்த்து பயனுள்ள சமூகப் பணிகளின் பங்காளர்களாக மாறுங்கள்.
மானுட மேன்மையை அவாவும் அனைவருக்கும் கருவி களமாய் அமையும்.

தேவி Printers,
140/1, Manipay Road, Jaffna.
0215100467